இலவச பிரதி

Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 ஆனி -18 02-07-2005 சனிக்கிழமை ஓசை 134



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி. வவுனியா.
T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987

## கிளிநொச்சி தே.எ.பே. மாநாட்டில் 2005 போர் ஆண்டாகப் பிரகடனம்



(அலுவலக செய்தியாளர்)

2005ஆம் ஆண்டை கிளிநொச்சி தேசிய எழுச்சிப் பேரவை போர் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் சங்கம நிகழ்வு நேற்று கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

நேற்று முற்பகல் 10.00 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர் சு.பசுபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற பேராளர் சங்கம ஆரம்ப நிகழ்வில் பொதுச் சுடரினை கிளிநொச்சி உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர் சொலமன் சூ.சிறில், திருமதி உஷா, கிளி.வலயப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதியின் தவறான அணுகுமுறைகளால் நாடு பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிறைவேற்று அதிகார சனாதிபதி முறைமையின் பலாபலன்களை இரு தடவைகள் அதாவது 12 வருடங்கள் அனுபவித்த பின்பு அம்முறைமை தவறு அதனைத் திருத்த வேண்டும் எனக் கூறுவது வேடிக்கையானது என ஐக்கியதேசியக் கட்சியின் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சனாதிபதி தனது பதவிக்காலம் முடிவடைந்து வீடு செல்லும் இறுதி நேரத்தில் நிறைவேற்று அதிகார சனாதிபதி முறைமையினை மாற்றி அமைக்க வேண்டும் எனத் தெரிவித்து வருகிறார். அவரின் தவறான அணுகுமுறைகளால் இன்று நாடு பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படைப் பிரச்சனைகள், பொருளாதார ரீதியாக (12 ஆம் பக்கம் பார்க்க)

### போராளிகளின் பயணங்களுக்குப் பாதுகாப்பளித்தல்

# விடுதலைப்புலிகளின் காலக்கெடு குறித்த விவகாரம்; கண்காணிப்புக் குழுத் தலைவர் அரசுக்கு விளக்கம்

## அரச தரப்பில் பதில் எதுவுமில்லை

(கொழும்பு)

**விடுதலைப்புலிகளின் பயணங்களுக்கு பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் வழங்கிய இரு வாரகால அவகாசம் குறித்து யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் நேற்று சிறிலங்கா அரசாங்கத்திற்கு விளக்கமளித்துள்ளனர். எனினும் இது குறித்து உடனடியாக அரச தரப்பிலிருந்து பதிலெதுவும் தெரிவிக்கப்படவில்லை.**

அரசாங்கத்தின் சமாதான செயலகப் பணிப்பாளர் ஜெயந்த தனபாலவைச் சந்தித்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் விடுதலைப்புலி உறுப்பினர்களின் பாதுகாப்பு சம்பந்தமாக அவர்களினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளை கையளித்துள்ளார்.

நாங்கள் யுத்த நிறுத்த உடன்படிக்கைகுறித்தும் சமாதான முயற்சிகள் குறித்தும் அதிக கவனம் செலுத்தியுள்ளோம் என தெரிவித்த ஹொக்லண்ட் விடுதலைப்புலிகளின் பயணங்களுக்கு பாதுகாப்பு வழங்குவது தொடர்பான விடயத்தில் இரு தரப்பினருக்கும் இடையிலான உறவு அவ்வளவு நல்ல முறையில் இல்லை (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி யின் சவால்களைச் சமாளிக்க ஆளும் கட்சிக்கு ஐ.தே.க ஆதரவளிக்கும்?

(கொழும்பு)

ரெஜிரோல்ட்கூரேயை மீண்டும் மேல் மாகாண முதலமைச்சர் ஆக்குவதில் ஐ.தே.க நடந்து கொண்ட மாதிரியானது ஏனைய மாகாண சபைகளிலும், பாராளுமன்றத்திலும் கூட எதிரொலிக்கலாம் என கொழும்பில் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

மேல் மாகாண முதலமைச்சராக இருந்த ரெஜினோல்ட் கூரே மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்த ஐ.தே.க மேல் மாகாண சபையை அடுத்த பெரும்பான்மை கொண்ட கட்சி என்ற ரீதியில் தான் கைப்பற்றலாம் என எண்ணியிருந்தது. ஆனால் ஜே.வி.பி அதனை முறியடிக்கும் வகையில் நந்தன மெண்டிஸ் முதலமைச்சர் ஆவதற்கு ஆதரவு வழங்கியது. ஆனால் இதற்கு எதிரான வகையில் ஐ.தே.க.நடந்து கொண்டு மீண்டும் கூரே முதலமைச்சர் ஆவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதே பாணியில் ஏனைய மாகாண (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பு நிதியம் தொடர்பாக சர்வதேச நிதி நிறுவனங்கள் ஆலோசனை!

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு நிதியம் தொடர்பாக சர்வதேச நிதி நிறுவனங்கள் தீவிர ஆலோசனை நடத்தி வருகின்றன.

கடந்த புதன்கிழமையன்று உலக வங்கியின் கொழும்பு அலுவலகத்தில் இதற்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஜப்பானிய வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

பொதுக்கட்டமைப்பு நிதியத்தை சிறிலங்கா திறைசேரி மூலம் செயற்படுத்துவது குறித்தும், அதில் உள்ள சிக்கல்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று ஆரம்பம்

(கொழும்பு)

செயலிழந்து போயுள்ள ஓர் அரசாங்கத்தை ஒரு போதும் ஐக்கிய தேசியக் கட்சி பொறுப்பேற்க தயாரில்லை எனவும் மக்களாணையைப் பெற்று உறுதியானதும், நிலையானதுமான அரசை விரைவில் அமைக்கப்போவதாகவும், அறிவித் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கரும்புலிகள் நாளை தமிழர் தாயகத்தில் எழுச்சியுடன் கடைப்பிடிக்க ஏற்பாடு

(நமது செய்தியாளர்)

கரும்புலிகள் நாளை முன்னிட்டு தமிழீழ பிரதேசமெங்கும் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அதற்கென பல்வேறு ஏற்பாடுகளில் பொது அமைப்புக்கள், நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன. வளைவுகள், வீதி அலங்காரங்கள் என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

கரும்புலிகள் நாளுக்கு முதல் நாள் கரும்புலிகளின் படம் வைத் திருக்கும் மண்டபங்கள், தூபிகள், பிரதிமைப்படங்கள், (கட்டவுட்) ஆகி யன துப்புரவு செய்து புனிதப்படுத்தி அலங்கரிக்கப்படும் பணி நிறைவுறும்.

மேலும் முதல் நாளே வீதிகள், பொது நிறுவனங்கள் ஆகியவற்றை அலங்கரித்து சிரமதானங்கள் மேற்கொள்ளும் பணி நிறைவுறும்.

05.07.2005 அன்று காலை 9.00 மணிக்கு தகுந்த, வேண்டிய இடங்களில் பொதுச்சுடரேற்றி, தேசியக் கொடியேற்றி, ஈகச்சுடரேற்றி, மலர் மாலை அணிவித்து அகவணக்கம் செலுத்தி வீரவணக்க உரையும் நிகழ்த்தப்படவுள்ளது.

காலையிலிருந்து மாலைவரை பொதுஇடங்களில் கரும்புலிகளின் படங்கள் வைத்து பாடல்கள், வரலாறுகள் ஒலிபரப்பப்படவுள்ளது.

மாலை 6.15 மணிக்கு பிர தேச வாரியாகவும், மாவட்ட ரீதி யாகவும், மக்கள் கூடும் இடங்களில் பொதுக் கூட்டம், கலைநிகழ்வுகள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### SPOKEN ENGLISH

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு அடிப்படை இலக்கணத்துடன் பயிற்சி ஆரம்பம:04.07.2005 மாலை 5.மணி இடம்: அன்னை வேளாங்கன்னி ஆலயம் முன்பாக உதயநகர் கிழக்கு. ஆசிரியர் க.யோகன (BBA&NDE) (6288)



### தவறிவிட்டது

வட்டக்கச்சி தபால்பெட்டி சந்திக்கு அருகில் முக்கிய ஆவணங்களுடன் பாக் ஒன்று தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி வருவாய்ப் பகுதி செயலகம் அல்லது வட்டக்கச்சி அங்காடி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றார்கள். (6317)



### தவறிவிட்டது

பா.நாகபூசணி என்பவரது அடையாள அட்டை, பயண அனுமதி அட்டை, பணம் என்பன றெட்பானாவுக்கும், பரந்தனுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (6313)


## விளையாட்டு விழா

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் ஆதரவுடன்அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும், சாஜி, செந்தமிழினி, சேரமான் முன்பள்ளிகளின் விளையாட்டு விழா இன்று சாஜி முன்பள்ளி விளையாட்டு மைதானத்திலும், கானகன், ஜமுனன், குஞ்சுப்பரந்தன் முன் பள்ளிகளின் விளையாட்டு விழா 04 ஆம் திகதியன்று கானகன் முன்பள்ளி விளையாட்டு மைதானத் திலும் நடைபெறவுள்ளது.

## சுற்றுச்சூழல் சுகாதாரம் தொடர்பாக முல்லைத்தீவில் நேற்று கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் சுற்றுச்சூழல் சுகாதாரம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம் பெற்றது.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தயா தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் முக்கியமாக சுனாமியினால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருக்கும் மக்களின் சுகாதாரம் தொடர்பாக ஆராயப்பட்டது.

குடியிருப்பின் கழிவகற்றலுக்காக தற்போது தகர கொள்கலம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் கழிவகற்ற முடியாதுள்ளதாக பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர். இதற்கு காபிக் பாக் தேவை என எடுத்துக் கூறப்பட்டது.

அத்துடன் சுனாமிபாதித்த நீர்நிலைகளில் உள்ள மீன்களை இப்பகுதியிலுள்ள மக்கள் உணவிற்கு பயன்படுத்தி வருவதால் அபாயகரமான நோய்கள் வர வாய்ப்புள்ளதாகவும் இதனைத் தடுத்து நிறுத்த தமிழீழ சுகாதார சேவையினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டதோடு, கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிப்பது தொடர்பான பயிற்சி வகுப்பினை பிரதேசசபை பணியாளர்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

இக்கலந்துரையாடலில் முல்லை.மாவட்ட தமிழீழ சுகாதார சேவையின் பொறுப்பாளர்,தமிழீழ சுகாதார சேவையின் பொதுசுகாதார பரிசோதகர்கள், பிரதேசசபையின் செயலாளர்கள், முல்லை. மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொதுசுகாதார பரிசோதகர்கள், முல்லை. மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப் பிரதிநிதி ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

## முல்லையில் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு மூன்றாம் கட்டக்கொடுப்பனவு வழங்கல்

முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மக்கள் வங்கி மூலமாக வழங்கப்படும் மூன்றாம் கட்டக் கொடுப்பனவு, நாளை மறுதினம் தொடக்கம் 17 ஆம் திகதி வரை வழங்கப்படவுள்ளதாக மக்கள் வங்கி முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மக்கள் வங்கி கிளையில் வைத்து எதிர்வரும் நான்காம் திகதி கோவில் குடியிருப்பு, முல்லைப்பட்டினம் ஆகிய கிராமங்களுக்கும், ஐந்தாம் திகதி மணற்குடியிருப்பு கிராம மக்களுக்கும் ஆறாம் திகதி வண்ணாங்குளம், கிராமத்திற்கும் ஏழாம் திகதி கள்ளப்பாடு வடக்கு கிராமத்திற்கும், எட்டாம் திகதி கள்ளப்பாடு தெற்கு கிராமத்திற்கும் 11 ஆம் திகதி செல்வபுரம் கிராமத்திற்கும், 12 ஆம் திகதி முல்லைத்தீவு தெற்கு கிராமத்திற்கும், 13 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் கிழக்கு வட்டுவாகல் ஆகிய கிராமத்திற்கும், 14 ஆம் திகதி சிலாவத்தை, சிலாவத்தை தெற்கு ஆகிய கிராமத்திற்கும் மக்கள் வங்கி கிளையில் வைத்து வழங்கப் படவுள்ளது.

ஒன்பதாம் திகதி அளம்பில் தெற்கு, அளம்பில் வடக்கு ஆகிய கிராமங்களுக்கும், 10 ஆம் திகதி செம்மலை, செம்மலை கிழக்கு ஆகிய கிராமங்களுக்கும், 15 ஆம் திகதி உடுப்புக்குளம் உப்புமாவெளி ஆகிய கிராமங்களுக்கும், 16 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் மேற்கு கிராமத்திற்கும், 17 ஆம் திகதி அம்பலவன் பொக்கணை மாத்தளன் ஆகிய கிராம மக்களுக்கும் அந்தந்தப்பகுதி கிராமஅலுவலர் அலுவலகத்தில் வைத்து வழங்கப் படவுள்ளதாகவும் தெரிவித்தார். (20)

## முல்லை. அன்னையர் முன்னணியின் மாதாந்த கலந்துரையாடல்

முல்லைத்தீவு மாவட்ட அன்னையர் முன்னணியின் மாதாந்தக் கலந்துரையாடல் முள்ளியவளைப் பிரதேச அரசியல் துறைச் செயலகத்தில் இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் காலை 10.30 மணிக்கு முல்லை. மாவட்ட அன்னையர் முன்னணியின் செயலாளர் திருமதி தயாளினி தலைமையில் நிகழ்வு ஆரம்பமானது. இதில் முல்லை. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், முல்லை. மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் வேழினி, முல்லை. மாவட்ட அன்னையர் முன்னனணித் தலைவி கௌரிபுத்திரி ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினார்கள்.

இதில் மட்டக்களப்பிற்கு வன்னியிலிருந்து 40 போராளிகள் பயணம் செய்த வாகனத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்ததோடு அன்னையர் முன்னணியின் மாதாந்தச் செயற்பாட்டில் கிராமதரிசிப்பு, சுனாமியினால் பாதிக்கப்பட்ட இளம் விதவைகளின் விபரங்கள் சேகரிப்பது தொடர்பாகவும் கிராமத்திலுள்ள மாதர்சங்கங்களை ஒன்று கூட்டி அவர்களுடான வேலைத்திட்டங்களை ஒழுங்கு படுத்தல் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டன.

இதில் முல்லை. மாவட்ட அன்னையர் முன்னணியின் சகல உறுப்பினர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)


## 06 ஆம் ஆண்டு நினைவலைகள்



### கப்டன் ஈழநேசன்
### (வேலாயுதன் பிரபாகரன்)

ஈழத்திற்காய் இன்னுயிர் ஈர்த்த
ஈழநேசனுக்காய்,
மூவிரண்டு வருடங்கள் கடந்தும்
உம் நினைவு சுமந்தபடி......

(சோலை விளையாட்டு கழகத்தினர்.) (6318)



## 3 ஆம் ஆண்டு நினைவில்

தாயின் மடியில் 27 - 09 - 1977



தாயக மண்ணில் 02 - 07 - 2002

### மேஜர் சகிலா/தமிழிசை

(மகாலிங்கம் சந்திரவதனா)
காரைநகர் யாழ்ப்பாணம்
முன்னாள் தமிழீழ பெண்கள்
மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர்

தானைத் தலைவன் அணியில்
வேங்கையாய் நீ வாழ்ந்ததும்
குன்றா உறுதியுடன் நீ நடந்ததும்
மறக்க முடியுமா?
எம் இனிய சகிலாவே
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
உன் புன்னகை முகமும்
கள்ளமில்லாப் பேச்சும்
என்நாளும் நினைவுக்குரியவளாய்
எம்மோடு நாளாந்தம் நீ
வாழ்வாய்.

என்றும் உன் நினைவில்
குடும்பத்தினர், போராளிகள்
(6319)



## வாழ்த்துகின்றோம்!



சந்திரகாந்தன்

ஜெயந்தி

எமது நிறுவனத்தில் பணிபுரியும் சந்திரகாந்தன் அவர்கள் திருமணபந்தத்தில் இணைவதையிட்டு நாம் மகிழ்வடைவதோடு திருமணத் தம்பதிகளை பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளர்,
பணியாளர்கள்.
ஈழநாதம்.

# மர்ம விமானம் ஏற்படுத்திய பீதி

# அமெரிக்க சனாதிபதி மாளிகை மூடப்பட்டது

(வோஷிங்டன்)

**அமெரிக்க சனாதிபதி புஷ் வசிக்கும் வெள்ளை மாளிகை அருகே மர்ம விமானம் ஒன்று தடையை மீறிப் பறந்ததால் பீதி ஏற்பட்டது, உடனே சனாதிபதி புஷ் மற்றும் அவரது குடும்பத்தினர் அங்கிருந்து பாதுகாப்பான இடத்திற்கு மாற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதி அல்ஹைதா தீவிரவாதிகள் விமானத்தைக் கடத்திச் சென்று கட்டடங்கள் மீது மோதித் தகர்த்ததைத் தொடர்ந்து சனாதிபதி வசிக்கும் வெள்ளை மாளிகை அருகே விமானங்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்டது.


இந்த நிலையில் சிறிய விமானம் ஒன்று தடை விதிக்கப்பட்ட பகுதிக்குள் அத்துமீறி நுழைந்தது.

அந்த விமானம் ரீகன் தேசிய விமான நிலையத்தின் வடகிழக்கு திசையில் அத்துமீறி நுழைந்தது.

இது நடந்த உடனே சனாதிபதியின் பாதுகாப்பு அதிகாரிகள் சனாதிபதி புஷ்சை அவரது வீட்டிலிருந்து பாதுகாப்பான இரகசிய இடத்திற்கு மாற்றினர். அவரது குடும்பமும் அப்புறப்படுத்தப்பட்டது.

வெள்ளை மாளிகைக்கு வந்த பார்வையாளர்களும், ஊழியர்களும் உடனடியாக வெளியேற்றப்பட்டனர்.

விமானம் அத்துமீறி நுழைந்த போது செனட் சபைக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. ஒரு பிரச்சினை மீது வாக்கெடுப்பு நடந்த போது அபாய எச்சரிக்கை அறிவிக்கப்பட்டு செனட்



உறுப்பினர்கள் சபையைக் காலி செய்ய உத்தரவிடப்பட்டது.

இதற்கிடையில் மேரிலாணட் விமான நிலையத்தில் இருந்து இரண்டு போர் விமானங்கள் அந்த மர்ம விமானத்தை மடக்கின. மர்ம விமானம் தரை இறக்கப்பட்டது. ஜோர்ஜீனியாவில உள்ள வின்செஸ்டர் விமான நிலையத்தில் அந்த விமானம் தரையிறக்கப்பட்டது.

அந்த விமானத்தில் ஒரு கவர்னர் பயணம் செய்ததாக பின்னர் தெரிவிக்கப்பட்டது.



ஸ்கொட்லாந்தில் நடைபெறவிருக்கும் ஜி–8 உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கும் அமெரிக்க அதிபர் புஷ் வோஷிங்டனின் மேயர் கேட்போர் கூடத்தில் உரையாற்றுகின்றார்.

## வியட்னாமில் பறவைக் காய்ச்சலுக்கு இறந்தோர் எண்ணிக்கை 39 ஆக உயர்வு

(ஹனாய்)

வியட்னாமில் பறவைக் காய்ச்சல் நோய்க்கு 73 வயதுள்ள ஹனாய் நகர வாசி ஒருவர் பலியானார். இதனால் இந்த நோய் தாக்கி இறந்தவர்களின் எண்ணிக்கை 39 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் இந்தநோய் மீண்டும் பரவத் தொடங்கியது. முதல் 60பேர் பாதிக்கப்பட்டனர். ஹனாய் நகரில் நான்கு பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் 73 வயதுக்காரரே பலியானார்.



பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையின் போது பாக்தாத்தில் கைது செய்யப்பட்டு பின்னர் இறந்த ஈராக்கின் பொலிஸ் அதி காரியான லெப் அன்மார் யசிரின் இறுதிக் கிரியையின் போது அழுது புலம்பிக் கொண்டு செல்லும் உறவினர்கள் (சம்பவத்தில் இவரது சகோதரனும் மேலும் பலரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.)

## 850 தொன் உணவுப் பொருளுடன் சோமாலியா சென்ற கப்பல் கடத்தல்

(நைரோபி)

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் சுனாமி பேரலை தாக்கிய போது பாதிக்கப்பட்ட சோமாலியா மக்களுக்கு உதவுவதற்காக உலக உணவுத் திட்டத்தின் கீழ் 850 தொன் அரிசியுடன் சென்ற கப்பல் கடத்தப்பட்டுள்ளது. கடத்தல்காரர்கள் அந்தக் கப்பலை விடுவிக்க வேண்டுமானால் இரண்டு கோடியே 50 இலட்சம் ரூபாய் பிணைத் தொகையாகத் தரவேண்டும் என்று கோரியுள்ளனர்.

செம்லோ என்ற அந்தக் கப்பலை, ஹோப்யோ நகருக்கு அருகே சோமாலிய கடத்தல்காரார்கள் கடத்தினர். அதில் இலங்கைக் கப்டன் உட்பட பத்து சிப்பந்திகள் இருந்தனர். அவர்கள் அனைவரும் பணயக் கைதிகளாக சிறைப் பிடிக்கப்பட்டுள்ளனர்.



காசா நகரிலுள்ள யூதக் குடியிருப்பில் சமுத்திரக் கோட்டை என்று அழைக்கப்படும் உணவு விடுதியை இஸ்ரேலியப் பொலிசார் முற்றுகையிட்டதையடுத்து அதன் குடியிருப்பாளர்கள் கூரை மீது ரயர்களைப் போட்டு எரிக்கின்றனர்.

# பிலிப்பைன்சில் அமைச்சர் அதிகாரிகள் இராஜினாமா

# சனாதிபதி அரோயாவின் ஆட்சி ஆட்டம் காணுகிறது

(மணிலா)

பிலிப்பைன்ஸ் சனாதிபதி அரோயாவுக்கு எதிராக எதிர்க்கட்சிகளும், ஆளும் கட்சி அமைச்சர்களும், அதிகாரிகளும் எதிர்ப்புத் தெரிவிப்பதால் அவரது அரசு நெருக்கடியைச் சந்தித்துள்ளது. பிலிப்பைன்சில் இப்போது அதிபராக இருப்பவர் குளோரியா அரோயா. இந்தப் பெண் அதிபர் கடந்த ஆண்டு நடந்த அதிபர் தேர்தலில் முறைகேடு நடத்தியதாக தகவல் வெளியானது. தனது வெற்றிக்கு சாதகமாக செயற்படும் படி தேர்தல் அதிகாரியுடன் இவர் தொலைபேசியில் பேசிய ஒலிநாடா ஆதாரம் வெளியானது. இத்துடன் பெண்அதிபரின் குடும்பத்தினருக்கும் சூதாட்டக் கும்பலுக்கும்தொடர்பு இருந்ததாகவும் புகார் கூறப்பட்டது. பெண் அதிபர் குடும்பத்தினர் சூதாட்டக் கும்பலிடம் இருந்து கோடிக்கணக்கில் பணம் பெற்றதாகவும் புகார் கூறப்பட்டது. இதனையடுத்து பெண் அதிபர் இராஜினாமா செய்யவேண்டும் என்று வற்புறுத்தி எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தி வருகின்றன.பாராளுமன்ற முற்றுகை போராட்டமும் நடைபெற்றது. இந்தநிலையில் பெண் அதிபருக்கு எதிர்ப்பு தெரிவித்து விவசாயத்துறை அமைச்சர்ஆர்தர்யாப் தனது பதவியை இராஜினமா செய்து விட்டார். இந்த அமைச்சர் மீது ஏற்கனவே வரி வசூலிப்பு செய்ததாக புகார் உள்ளது.

குளோரியாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மேலும் சில அமைச்சர்கள் இராஜினாமா செய்ய முடிவு செய்திருக்கிறார்கள். இதேபோல சில அதிகாரிகளும் இராஜினாமா செய்திருக்கிறார்கள்.

இந்த விவகாரம் காரணமாக அதிபர் குளோரியாவுக்கு நெருக்கடி முற்றி வருகிறது.

பெண் அதிபரின் கணவர் மைக் இப்போது வெளிநாடு சென்றிருக்கிறார். சூதாட்டக் கும்பலிடம் பணம் ஏற்பாடு செய்தவர் இவர்தான் என்று கூறப்படுகிறது. அவர் எப்போது வெளிநாட்டில் இருந்து திரும்புவாரா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

## அமெரிக்கத் தொழில் அதிபர் ஒருவரின் வைர மோதிரத்தை அபகரித்ததாக புட்டின் மீது குற்றச்சாட்டு

அமெரிக்கத் தொழில் அதிபர் ஒருவரது வைரமோதிரத்தை விரலில் போட்டுப் பார்த்த ரஷ்ய அதிபர் பின் அதைத் தன் சட்டைப்பையில் போட்டுக் கொண்டு அபகரித்து விட்டார் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

ரஷ்ய அதிபர் புட்டின் ரஷ்யாவில் வெளிநட்டு முதலீட்டை அதிகரிப்பதற்காக உலக பெரும் நிறுவனத் தலைவர்களின் கூட்டத்தை லெனின் கிராட் நகரில் கூட்டியிருந்தார். இதில் அமெரிக்காவைச் சேர்ந்த பெரிய பெரிய நிறுவனங்களின் தலைவர்கள் கலந்து கொண்டனர். மூன்று மணி நேரம் கூட்டம் நடந்தது. அதன் பின் நிருபர்கள் கூட்டம் நடந்தது.

அப்போது அமெரிக்கத் தொழில் அதிபர் ராபர்ட் கிராப்ட் புட்டினைச் சந்தித்த போது விரலில் அணிந்திருந்த ஏழு லட்சம் ரூபாய் மதிப்புள்ள மோதிரத்தை புட்டினிடம் காட்டினார். அதை வாங்கித் தன் விரலில் அணிந்து கொண்டு அழகு பார்த்த புட்டின் "நல்ல மோதிரம்" என்று கூறியபடி அதைக் கழற்றித் தன் சட்டையில் போட்டுக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது அவருக்கு அன்பளிப்பாக கொடுக்கப்பட்டதா? அல்லது பரிசாக வழங்கப்பட்டது என்று தவறாக புட்டின் நினைத்து விட்டாரா என்பது தெரியவில்லை. எந்த நிலையிலும் புட்டின் மோதிரத்தை அப்கரித்ததாக ரஷ்ய பத்திரிகைகள் குற்றம் சாட்டியுள்ளன.

## ஜேர்மனியில் மக்கள் தொகை குறைகிறது

(பெர்லின்)

ஜேர்மனியின் மக்கள்தொகை 2004ஆம் ஆண்டில் சரிந்துள்ளது. 2004 ஆம் ஆண்டில் மக்கள் தொகையில் 31ஆயிரம் பேர் குறைந்தனர். அதற்கு முந்தைய ஆண்டு ஐந்து ஆயிரம் பேர்தான் குறைந்தனர்.வெளிநாடுகளிலிருந்து குடியேறிய 83 ஆயிரம் பேரை சேர்த்த பிறகும் கூட மக்கள் தொகையில் சரிவு ஏற்பட்டுள்ளது. 1991ஆம் ஆண்டு முதல் பிறப்பு விகிதம் குறையத்தொடங்கியது. ஜேர்மனியின் மொத்த மக்கள் தொகை எட்டு கோடியே 25இலட்சம் ஆகும். இதில் 67இலட்சம் பேர் வெளிநாட்டினர் ஆவார்கள்.

## குடி தண்ணீர் மாசானது குடித்த ஆறுபேர் மரணம்

பாகிஸ்தானின் லாகூர் நகரில் குடி தண்ணீர் குழாயில் சாக்கடை நீர் புகுந்து அதைக் குடித்த ஆறு பேர் வயிற்றுப் போக்கு ஏற்பட்டு மரணமடைந்தனர். 500இற்கும் மேற்பட்டவர்கள் பல்வேறு வைத்தியசாலைகளியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.




பாக்தாத்தில் அமெரிக்க, ஈராக்கியப் படையினர் இணைந்து நடத்தும் " வாள "இராணுவ நடவடிக்கையின் போது பாலம் ஒன்றுக்கு கீழான சோதனைச் சாவடியில் இருந்து சைகை காட்டும் அமெரிக்கப் படையினரையும், பூட்டப்பட்ட கடையொன்றின் முன்னால் நடந்து செல்லும் அமெரிக்க கப்பற் படைகப்ரனையும் படங்களில் காணலாம்.






ஜி.ரி.சற் அனுசரணையுடன் பொருண்மிய மதியுரையகத்தினால் நேற்று முன்தினம் உப்பள செயலக வளாகத்தில் புதிதாகக் கட்டப்பட்ட ஆனையிறவு உப்பள மகளிர் தங்கும் விடுதி மற்றும் பொதுமண்டபத்திறப்பு விழாவில் திருமதி. எழுமதி கரிகாலன், பெண்கள் விடுதி திறந்து வைப்பதையும், அரசியல் துறைதுணைப்பொறுப்பாளர் சோ. தங்கன், ஜி.ரி.சற் வடபிராந்தியப் பணிப்பாளர் ஆகியோர் உரைநிகழ்த்துவதையும் படத்தில் காணலாம்.






சிறிலங்கா இராணுவத்தால் அழிக்கப்பட்ட தட்டுவன் கொட்டி கிராமம் புனர்நிர்மாண வேலைத்திட்டங்கள் மூலம் புனரமைக்கப்பட்டுள்ளதையும் கிராமத்திற்கான பெயர்ப்பலகையை சிரான் பணிப்பாளர் செல்வின் அவர்கள் திரைநீக்கம் செய்துவைப்பதையும் அக்கிராமத்தில் மரக்கன்றுகளை தமிழர்புனர்வாழ்வுக்கழக திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி நாட்டுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்-சோதி)

# தட்டுவன்கொட்டி மீள்குடியேற்றக்கிராமத்தில் 110 வீடுகள்
# தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் பயனாளிகளிடம் கையளிப்பு

**இராணுவத்தினால் அழிக்கப்பட்ட கிளிநொச்சி ஆனையிறவுப் பகுதியிலுள்ள தட்டுவன் கொட்டிக் கிராமம் புனர்நிர்மாண வேலைத் திட்டங்கள் மூலம் புனரமைக்கப்பட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் பயனாளிகளிடம் வீடுகள் நேற்று முன்தினம் கையளிக் கப்பட்டன.**

ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான அமைச்சின் நிதிப் பங்களிப்புடனும் ஜேர்மன் தொழில் நுட்பப் பிரிவின் ஒத்துழைப்புடனுமே இக்குடியிருப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நிறுவப்பட்டு மக்களிடம் வழங்கப்பட்டது. 110 வீடுகளைக் கொண்ட இந்தக் குடியிருப்பு வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்ட இணைப்பாளர் இராஜன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் ஆரம்ப நிகழ்வாக பொதுச் சுடரினை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சிறுவர் நலன் திட்டப்பிரிவுப் பணிப்பாளர் இராசு ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து தேசியக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றிவைக்க, தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் கெங்காதரன் ஏற்றி வைத்தார். மங்கல விளக்கினை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் (GTZ) பணிப்பாளர் கரப்பா, தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன், உதவி அரசாங்க அதிபர் சத்தியசீலன், வலயக் கல்விப் பணிப்பாளர் பத்மநாதன், சிரான் பணிப்பாளர் செல்வின் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தட்டுவன்கொட்டிக் கிராமத்தின் பெயர்ப்பலகையினை இ.செல்வின் அவர்கள் திரைநீக்கம் செய்துவைத்தார். குடியேற்றத்திட்டத்திற்கான பொதுநோக்கு மண்டபத்தினை கரப்பா நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். தொடர்ந்து பயனாளிகளிடம் வீடுகள் வழங்கும் நிகழ்வு வைபவரீதியாக இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து வீடுகளுக்கான உரிமைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் (GTZ) இணைப்பாளர் ஜெயக்குமார், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் இரவிச்சந்திரன், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, சமூக ஆற்றுப்படுத்தல் பிரிவின் ஆலோசகர் திருமதி. ரஜனி இக்பால், உப்பள உற்பத்தி நிறுவன ஆலோசகர் வேலாயுதபிள்ளை, அரசியல் துறையின் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் தியாகராசா, கிராம சேவையாளர் இராசரத்தினம், கிராமிய கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனப் பணிப்பாளர் இராணிமைந்தன் உட்பட பலர் வழங்கியிருந்தனர். இந்தக் குடியிருப்பு வழங்கும் நிகழ்வில் மரக்கன்றுகளும் நாட்டப்பட்டன. தொடர்ந்து சிறப்புரைகள், கருத்துரைகள் என்பனவும் இடம்பெற்றன. சிறப்புரைகளை கரப்பா, லோறன்ஸ் கிறிஸ்ரி ஆகியோர் நிகழ்த்தியதையடுத்து இ.செல்வின் உமைநேசன், குருநாதன், பத்மநாதன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். இந் நிகழ்வில் அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தொண்டர்கள், பணியாளர்கள், போராளிகள், பொதுமக்களெனப் பெருமளவானோர் கலந்து சிறப்பித்தனர்.

## காது, மூக்கு, தொண்டை நோய்களுக்கான சிகிச்சை

புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் வெளிநாட்டிலிருந்து வருகை தந்திருக்கும் வைத்திய நிபுணர் டாக்டர் பெஞ்சமின் அவர்களால் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அதாவது நாளை காலை ஒன்பது மணிமுதல் மாலை மூன்று மணிவரை காது, மூக்கு, தொண்டை சம்பந்தமான நோய்களுக்கான சிகிச்சை நடைபெறவுள்ளதால்பயன் பெறவிரும்புவோர் அன்றைய தினம் புதுக்குடியிருப்பிலுள்ள டாக்டர் பொன்னம்பலம் மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

## முக்கிய கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டாங்கேணி, தென்னமரவடி ஆகிய பகுதி வாழ் மக்களுக்கான முக்கிய கலந்துரையாடல் இன்று மாலை 5.00 மணிக்கு வித்தியானந்தாக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் இப்பகுதி வாழ் மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு முல்லை.மாவட்ட அரசியல் துறையினர் வேண்டுகின்றனர்.

# மாவீரர் பெற்றோர் கௌரவிப்பும், மாதாந்த வீரமுரசு நிகழ்வும்

(முள்ளியவளை)

முல்லைத்தீவு தண்டுவான் பிரதேசஅரசியல்துறையினரின் ஒழுங்குபடுத்தலில் தண்டுவான் பிரதேசத்தில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பும், மாதாந்த வீரமுரசு கலைநிகழ்வும் சிறப்புற நடை பெற்றுள்ளது.

மேற்படி நிகழ்வானது தண்டுவான் பாடசாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை தண்டுவான் பாடசாலை அதிபர் ச.செல்வரட்ணம் தலைமை யில் இடம்பெற்றது.

நிகழ்வில் பொதுச் சுடரினை முல்லை மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் வேழினி ஏற்றிவைத்தார். தொடர்ந்து தண்டுவான், தட்டாமலை, இத்திமடு, மாமடு, பழம்பாசி, கரடிப்புலவு, 17ஆம் கட்டையடி ஆகிய வலயங்களை உள்ளடக்கிய மாவீரர்களின் திருவுருவப்படங்கள் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பகுதியில் மாவீரர்களின் பெற்றோர் ஈகச்சுடரேற்றி, மலர்மாலை அணிவித்ததையடுத்து பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் அ.ஈழவன், மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் வேழினி, தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் மாவீரர்களின் பெற்றோர்களுடன் கலந்துரையாடி பெற்றோர்களைக் கௌரவித்ததையடுத்து நிகழ்வில் தலைவரின் தலைமையுரை இடம்பெற்று கலை நிகழ்வு ஆரம்பமானது.

கலைநிகழ்வின் ஆரம்பத்தில் வரவேற்பு நடனம், மாவீரர் நடனம் என்பனவற்றுடன் பட்டிமன்றம்,பாட்டு, கவிதை, நாடகம், வினாடிவினா, இசையும் -அசைவும் போன்ற நிகழ்வுகளும் கருத்துரையினை மாவட்ட மகளிர் பொறுப்பாளர் வேழினியும் நிகழ்வுக்கான கௌரவ சிறப்புரையினை தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினியும் நிகழ்த்தினர்.

மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள், அப்பகுதி சகல பாடசாலை மாணவ மாணவிகள், போராளிகள் எனப்பெருமளவானோர் கலந்துகொண்டனர். (ஆ)

# குமா சிறுவர் பூங்காவின் — மெய்வல்லுனர் திறனாய்வு விழா

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் ஊரக வளர்ச்சிப் பணி நிர்வகிக்கும் கிளி. அம்பாள்குளம் குமா சிறுவர் பூங்காவின் 2005ஆம் ஆண்டின் மெய்வல்லுனர் திறனாய்வுவிழா நிகழ்வு கடந்த புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சிறார்களின் பாண்ட் வாத்திய அணி வகுப்புடன்பூங்கா நிர்வாகிஅ.எ பிரான்சீஸ் தலைமையில் ஆரம்பமானது.

இந்நிகழ்வின் மங்கல விளக்கினை த.பு.கழக உதவி நிறை வேற்றுப்பணிப்பாளர் றீகன் வணிகர் ஒன்றியத்தின் தலைவர் ஜெயராஜ் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றி வைத்தார்.

லெப்.குமாவின் திருவுருவப்படத்திற்கு குமாவின் சகோதரன் சிதம்பரநாதன் ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார். தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியினை த.பு.க. உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் றீகன், முன்பள்ளி கல்வித் திட்ட மேம்பாட்டுக் கொடியினை கிளி.மாவட்ட முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய இணைப்பாளர் யோ.நிலா, சிறுவர் கல்வி ஊட்ட மேம்பாட்டுப் பணிக்கொடியினை தமிழர் புனர்வாழ்வுக்கழக சிறுவர் நலன் திட்டப் பணிப்பாளர் ரவி, பூங்காக் கொடியினை பூங்கா நிர்வாகி அ.எ.பிரான்சீஸ் ஆகியோர் ஏற்றி வைத்தார்கள்.

தொடர்ந்து தலைமையுரையினை பூங்கா நிர்வாகியும், வரவேற்புரையை தலைமை ஆசிரியை சுப்பிரமணியம் றஜிகலாவும், ஆசியுரையை தமிழீழ அரசியல்துறைப் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கனும் நிகழ்த்தினர்.

தொடர்ந்து விளையாட்டு சுடரினை ஆரம்பப்பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பணிப்பாளர் பாண்டியன் ஏற்றி வைக்க, விளையாட்டுக்கள் ஆரம்பமாகின. விழாவின் சிறப்பு நிகழ்வாக இசையும், அசைவும் இடம்பெற்றது. தொடர்ந்து சிறார்களின் வினோதஉடை நிகழ்வும், உத்தியோகத்தர், பணியாளர்கள் நிகழ்வும், பெற்றோர்களுக்கான நிகழ்வும் நடைபெற்று சிறார்களுக்கான பரிசுப் பொருட்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டு நன்றியுரையுடன் விளையாட்டு விழா நிறைவு பெற்றது.

# படையினரின் அப்பக்கடை அமைக்கும்முயற்சி

# பொதுமக்களின் எதிர்ப்பினால் கைவிடப்பட்டது

(தென்மராட்சி)

**கச்சாய் கோயில் வீதியில் அப்பக்கடை அமைக்க படையினர் எடுத்த முயற்சி இப்பகுதி பொதுமக்களின் கடுமையான எதிர்ப்பினால் கைவிடப்பட்டுள்ளது.**

நேற்று முன்தினம் படையினர் மக்களின் வாழ்விடங்களுக்கு அருகாமையில் அப்பக் கடை அமைக்க முயற்சி எடுத்துள்ளனர். அப்பகுதி மக்கள் ஒன்றிணைந்து எதிர்த்ததால் படையினர் அப்பக்கடை அமைக்கும் முயற்சியை கைவிட்டு அமைத்த கடையினையும் பிடுங்கிச் சென்றுள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் பல்வேறு இடங்களிலும் இராணுவத்தினரால் அப்பக்கடைகள் அமைக்கப்பட்டுள்ளதுடன் அவற்றின் மூலம் சமூகச் சீர்கேட்டு நடவடிக்கைகளிலும், புலனாய்வு தகவல திரட்டும் நடவடிக்கையிலும் படையினர் ஈடுபட்டு வருவது தெரிந்ததே. (28)

# சாரதி அனுமதிப் பத்திர தேர்வுகளுக்கு தோற்றாதோர் தொடர்புகொள்க

(அலுவலக செய்தியாளர்)

சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பித்து குறித்து திகதிகளில் தேர்வுகளிற்கு தோற்றாதவர்கள் எதிர்வரும் ஐந்தாம் திகதி யாழ். செயலகத்திற்கு சமுகமளித்து தேர்வுகளுக்கான திகதிகளை அறிந்து கொள்ளும்படியும் இச் சந்தர்ப்பத்திலும் சமுகம் தராதவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் எனவும் வட பகுதி மோட்டார் வாகனப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

இதுவரை சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு விண்ணப்பித்து தேர்வுகளிற்கு குறித்த திகதிகளில் சமுகம் தராதவர்களின் விண்ணப்பங்கள் யாழ்.செயலகத்தில் ஆயிரத்திற்கும் அதிகமானவை தேங்கி கிடக்கின்றன. இதனால் புதிய விண்ணப்பதாரிகளுக்கான தேர்வுகளை நடத்துவதில் பெரும் சிரமங்கள் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.(சு)

# தென்மராட்சி தென்பகுதிக்கு மின்சாரம் வழங்கக் கோரிக்கை

(தென்மராட்சி)

தென்மராட்சியின் தென்பகுதியில் அமைந்துள்ள கிராமங்களான நாவற்குழி, தச்சன் தோப்பு, மறவன் புலோ, கோயிலாக்கண்டி, கைதடி நாவற்குழி, போன்ற மீளக்குடியமர்ந்துள்ள கிராமங்களுக்கு மின் விநியோகம் வழங்க நடவடிக்கையினை எடுக்க வேண்டுமென இக்கிராம மக்கள பல்வேறு தரப்பினரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தமது கிராமங்களுக்கு ஊடாகவே யாழ்ப்பாணத்தில் இருந்து தென்மராட்சியின் ஏனைய பிரதேசங்களுக்கு மின் விநியோகம் நடைபெறுவதாகவும் இதில் சம்பந்தப்பட்டோர் கூடுதல் கவனம் செலுத்தி இருளில் மூழ்கியுள்ள கிராமங்கள் வெளிச்சம் பெற நடவடிக்கையினை எடுக்க வேண்டுமென கோரியுள்ளனர். (28)

# கரும்புலிகள் நினைவு நாளை முன்னிட்டு குடாநாட்டில் சிரமதானம், போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் நாளை முன்னிட்டு யாழ் .குடாநாட்டின் பலபகுதிகளிலும் சிரமதான நடவடிக்கைகளும் போட்டிகளும் நடாத்தப்பட்டு வருகின்றது.

பல்வேறு பொது அமைப்புக்களும் வைத்தியசாலைகள், பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் இச்சிரமதானப்பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

சுவதேச தமிழீழ மாணவர் பேரவை கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே போட்டிகளை நடாத்தி வருகின்றது.

1987 ஆம் ஆண்டு லிபறேசன் ஒப்பரேஷன் இராணுவ நடவடிக்கை மூலம் வடமராட்சிப்பகுதியினை ஆக்கிரமித்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகளின் முதலாவது கரும்புலித்தாக்குதல் அவ்வாண்டில் ஜூலை ஐந்தாம் திகதி நடத்தப்பட்டிருந்தது தெரிந்ததே.(27)

# திருட்டுக்கள், சமூக சீர்கேடுகளை கட்டுப்படுத்த குடாநாட்டில் விழிப்புக்குழுக்கள் அமைப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ் குடா நாட்டில் இடம் பெற்று வரும் திருட்டுச் சம்பவங்கள் மற்றும் சமூகச் சீர்கேடுகளை கட்டுப்படுத்த விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கொழும்புத்துறை, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம், ஓட்டுமடம் பகுதிகளில் அண்மைக்காலமாக நடைபெற்று வரும் தொடர் களவுகளினால் அப்பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் கடும் அச்சத்துக் குள்ளாகியுள்ளனர். சிறுவர்கள் உளவியல் ரீதியான தாக்கத்திற்குள் ளாகி வருகின்றனர். இதனால் அப் பகுதி மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். கோட்ட அரசியல் துறைச் செயலகத்தில் முறையிட்டுள் ளனர்.

இதனையடுத்து யாழ். கோட்டப் பொறுப்பாளரும் சமூகத்தில் அக்கறை கொண்டுள்ள இளைஞர்களும் இணைந்து களவினைக் கட்டுப்படுத்துமுகமாக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

கிராமங்கள் தோறும் விழிப்புக்குழு அமைத்து கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இதன் போது சமூகவிரோதச் செயல்கள் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

இரவு வேளைகளில் கத்தி, வாளுடன் நடமாடியவர்கள் பலர் பிடிக்கப்பட்டு அவை பறிமுதல் செய்யப்பட்ட தோடு, கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளனர். மேற்படி விழிப்புக் குழு கண்காணிப்பின் போது செம்மணி அரியாலைப பகுதிகளில் சட்ட விரோதமாக மணல் ஏற்றுவோர் பலரும் பிடிக்கப்பட்டு எச்சரித்து விடப்பட்டுள்ளனர். (சு)

# நூலகமும் தகவல் விஞ்ஞானமும் கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை நூலக சங்கத்தினால் நடத்தப்படும் நூலகமும் தகவல் விஞ்ஞானமும் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண நிலையத்தில் இக் கற்கை நெறியினைப் பயில விரும்புவோர் இன்றும் நாளையும் மற்றும் ஒன்பதாம், பத்தாம் திகதிகளிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் முற்பகல் 9.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை நடைபெறவுள்ள நேர்முகப்பரீட்சைக்கு நேரடியாகச் சமுகமளிக்கலாம் முதலில் வருவோருக்கு முன்னுரிமை என்றஅடிப்படையில் அனுமதி வழங்கப்படவுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழமொன்றின் பட்டதாரிஅல்லது, க.பொ.த (உ.த) பரீட்சையில் ஒரு தடவையில் 03 சித்திகளுடன் க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தி பெற்றிருத்தல் அல்லது க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கில மொழியுடன் கூடிய 06 சித்திகளுடன் நூலகத் துறையில் குறைந்தது 03 வருடங்களாவது தொழில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் (ஆங்கிலத்தில் சித்தியில்லாதவர்களுக்கு ஆங்கிலத்தில் தகுதிகாண் பரீட்சை நடத்தப்படும்) என்பன இதற்கான தகைமைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

# தென்மராட்சியில் மரத்தளபாட தொழிற் பேட்டையை அமைத்துத்தருமாறு அரச அதிபரிடம் கோரிக்கை

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் அதிக அளவு மரவேலை செய்யும் தொழிலாளர்களை உள்ளடக்கிய கிராமமான தச்சன் தோப்பு கிராமத்தில் மரத்தளபாடங்கள் செய்யும் தொழிற் பேட்டை ஒன்றை அமைத்துத்தரவேண்டும் என்று யாழ். அரச அதிபரிடம் இக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது கொழும்பில் இருந்து சாதாரண வகை மரங்களில் செய்யப்பட்ட மரத்தளபாடங்கள் யாழ். குடாநாடெங்கும் அதிக விலைக்கு விற்கப்பட்டுவருவதாகவும் இவற்றை தடுக்க இப்பகுதியில் மரத்தளபாடங்கள் செய்யும் தொழிற்பேட்டை ஒன்றை யாழ். அரசாங்க அதிபர் அமைத்துத் தர வேண்டும் என்றும் இதன் மூலம் மக்களுக்கு தரமான மரத்தளபாடங்கள் வழங்க முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (28)

# தென்மராட்சியைப் புனர்நிர்மாணம் செய்ய 2160 மில்லியன் ரூபா நிதி தேவை

## - யாழ். அரச அதிபர் கணேஷ் தெரிவிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தை புனர்நிர்மாணம் செய்ய 2160 மில்லியன் ரூபா நிதி தேவையென நேற்று நடைபெற்ற தென்மராட்சி அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் யாழ். அரசாங்க அதிபர் கணேஷ் தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை சாவகச்சேரி இந்துக கல்லூரியில் நடைபெற்ற தென்மராட்சி அபிவிருத்திக்குழு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்தகால யுத்த நடவடிக்கைகளால் யாழ். குடாநாட்டிலேயே அதி களவு சேதமுற்ற பிரதேசமான தென்மராட்சி பிரதேசத்தை மீளக்கட்டியெழுப்ப குறைந்த பட்ச மதிப்பீடுகள் மூலம் எடுக்கப்பட்ட தரவுகளின் படியே இம்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் அனைத்து திணைக்களங்களின் அதிகாரிகளும் யாழ். பாராளுமன்ற உறுப்பினர்களும் அபிவிருத்திக்குழுக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர் (28)

# யாழ்.பிரதம தபாலகத்தில் உந்துருளி தரிப்பிடம் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பிரதமதபால் அலுவலகத்தில் துவிச்சக்கர வண்டிகள், உந்துருளிகள் நிறுத்துவதற்கு தரிப்பிடங்கள் இல்லாமையால் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

நாள்தோறும் பல்வேறு பணிகளுக்காக வரும் நூற்றுக்கணக்கான மக்கள் தாம் கொண்டுவரும் உந்துருளிகள், ஈருளிகளை கடுமையான வெய்யிலில் நிறுத்திவிட்டு தமது அலுவல்களுக்கு செல்வதாகவும் இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து இவ் வாகனங்களை நிறுத்துவதற்கு வாகனத் தரிப்பிடங்கள் அமைக்க வேண்டுமென மக்கள் கோரியுள்ளனர். (28)

# திருட்டு

சாவகச்சேரி பேருந்து நிலையத்திற்கு முன்னாலிருந்த கையடக்க தொலைபேசி திருத்தும் கடை ஒன்று நேற்று முன்தினம் இரவு உடைக்கப்பட்டு பல இலட்சம் ரூபா மதிப்புடைய தொலைபேசிகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.கடையின் கூரைஓடுகள் பிரிக்கப்பட்டு இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது. (28)

# 4635 காணிப் பிரச்சினைகளில் 712 பிரச்சினைகளுக்குத் தீர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் .குடாநாட்டில் இடம் பெற்ற துரித காணிச் செயலணி நடவடிக்கையின் போது பொதுமக்களினால் பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக மக்களினால் முன்வைக்கப்பட்ட 4635 பிரச்சினைகளில் 712 பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன.

கடந்த பல வருடங்களாக பொது மக்களுடைய பல்வேறு காணி சம்பந்தமான பிரச்சினைகளும் யுத்தத்தைக் காரணம் காட்டி அரச உத்தியோகத்தர்களினால் புறந்தள்ளப்பட்டு வந்தன.

தற்போது தமிழீழ விடுதலைப் புலிகள் கிராமம் கிராமமாகச் சென்று மக்கள் தரிசிப்புக்களை ஏற்படுத்தி வருவதைத் தொடர்ந்து மக்களுடைய பிரச்சினைகள் இனம் காணப்படுவதை அடுத்து அரச உத்தியோகத்தர்கள் மக்களுடைய பிரச்சினைகளில் கவனம் எடுக்கத் தொடங்கியுள்ளார்கள். (11)

# சாவகச்சேரி வைத்தியசாலை புனரமைப்பிற்கு முதற்கட்டமாக 15 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகர வைத்திய சாலைக்கு புதிய கட்டடங்கள் அமைக்க முதல் கட்டமாக 15 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

நகர வைத்திசாலைக்கு நிர்வாக அலுவலக கட்டடமும் இரண்டு அடுக்கு மாடிகளைக் கொண்ட நோயாளர் விடுதிகளும் வரும் ஆண்டுக்குள் கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கட்டடங்கள் கட்டுவதற்கு முன் நடவடிக்கையாக கடந்த கால வீமானக் குண்டு வீச்சுக்களாலும் படையினரால் மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலாலும் அழிக்கப்பட்ட கட்டட இடிபாடுகள் தற்போது அகற்றப்பட்டு வருகின்றன. (28)

# உள சமூக சேவை நிறுவனங்களை உடனடியாக பதிவு செய்யக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

உள சமூகசேவையில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்கள் யாழ்ப்பாணத்திலுள்ள மாகாண சுகாதார சேவை பிரதிப்பணிப்பாளர் பணிமனையில் உடனடியாகத் தொடர்பு கொண்டு தங்களது நிறுவனத்தை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட நிறுவனங்களில் பணியாற்றும் உள சமூக சேவையாளர்களுக்கு அடையாள அட்டை மாகாண சுகாதார பிரதிப்பணிப்பாளர் பணிமனையினால் வழங்கப் படுவதற்காகவே இப்பதிவினை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் மாகாணப்பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

# உலகம் பாலைவனமாகிறது

## எச்சரிக்கிறது ஐ.நா சபை

உலகநாடுகள் அனைத்தும் பாலைவனமாக மாறி வருகின்றன. அதன் விளைவு உலகின் எப்பகுதியிலும் மனிதன் வாழமுடியாத நிலை ஏற்படுவதாகும்.

அண்மையில் ''உலகில் பாலைவனமாதல் தடுப்பு தினம்'' அனுஷ்டிக்கப்பட்ட போது இது தொடர்பான சில தகவல்கள் வெளியாகியிருப்பதே மேற்படி அச்சத்திற்குக் காரணமாகும். 95 உலக நாடுகளின் 1360 விஞ்ஞானிகளின் அறிக்கைகளுக்கேற்ப முதலில் புவியில் தற்போதுள்ள பாலைவனங்களுக்கு அண்மையாகவுள்ள பிரதேசங்கள் பாலைவன மாவது மட்டுமன்றி ஏனைய பிரதேசங்களில் வாழும் உயிரினங்களும் பாதிப்பிற்குள்ளாவதாக அறிய வருகின்றது.

ஐக்கிய நாடுகளின் நீர்முகாமைத்துவ கல்லூரியின் பணிப்பாளர் சபார் ஆதில் வெளியிட்டுள்ள தகவலில் உலகின் வரண்ட பிரதேசங்களில் இரண்டு மில்லியன் பேர் வரை வாழ்வதாக தெரிவிக்கப்படுகிறது. வட ஆபிரிக்கா முதல் மத்தியாசியா வரை இந்நாடுகள் பரவியிருக்கின்றன. மேலும் ஒரு தகவலின்படி பாலைவனப் புயல் காரணமாக அயல் நாடுகளில் வாழும் உயிரினங்கள் பாதிப்பிற்குள்ளாவதாக கூறப்படுகிறது. சகாராவில் ஏற்படும் பாலைவனப் புயல் காரணமாக வட அமெரிக்க நாடுகளைச் சேர்ந்தோர் சுவாசம் சம்பந்தமான நோய்களுக்கு இலக்காகின்றனர் என்றும் மொங்கோலியா பாலைவனப் புயல் காரணமாக ஜப்பான் ஹவாய் நாடுகளைச் சேர்ந்தோர் பாதிப்பிற்குள்ளாவதாகவும் கூறப்படுகிறது.

பாலைவனங்கள் உருவாக பிரதான காரணம் காடுகள் அழிக்கப்பட்டு குடியிருப்புக்கள் அமைக்கப்படுதலேயாகும். இதற்குக் காரணம் பெருகிவரும் சனத்தொகையாகும். அத்துடன் திட்டமிடப்படாத நீர் முகாமைத்துவமும் பாலைவனம் ஏற்படக் காரணமாகின்றது. அவை மட்டுமன்றி புவியின் வெப்பமடைதல்வீதம் அதிகரித்து வருவதும் அதனால் வரட்சி ஏற்படுதலும் பாலை வனங்கள் உருவாகவும் காரண மாகும்.

மேலும் பாலைவனத்துக்கும் வறுமைக்கும் நேரடி தொடர்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. காரணம் அங்குஉணவு உற்பத்தியின்மை, மக்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயர்தல் அத்துடன் பல்வேறு நோய்களுக்கு ஆளாதல் என்பன நிகழ்கின்றன. அண்மைய கணிப்பீட்டின்படி பாலைவனப் பிரதேசங்களில் ஆயிரம் பேருக்கு 54 பேர் பட்டினிச் சாவை எதிர்கொள்கின்றனர். ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இதன் வீதம் அதிகமாகும். வெப்பக் காலநிலையின் போது. காய்ச்சல், கண்நோய், சொறி, சிரங்கு, இருமல் போன்ற நோய்கள் அதிகரிக்கின்றன. மேலும் பாலைவனப் புயல்காரணமாக அண்மைய நாடுகளின் இயற்கைச் சூழல் மாசடைதல், பக்ரீரியாக்களின் பரம்பல் அதிகரிக்கின்றன. இந்தப் பக்ரீரியாவின் தாக்கத்தினாலேயே கரிபியன் பிரதேசங்களில் பவளப் பாறைகள் சேதமடைவதாகக் கூறப்படுகிறது.

இதனாலேயே ஐக்கிய நாடுகள் சபை 1992 முதல் பாலைவன தடுப்பு தினத்தை பிரகடனப் படுத்தியது. அவ்வமைப்பின் கணிப்பின்படி 1991 முதல் 2000ஆம் ஆண்டுவரை 28 ஆயிரம்பேர் பிரதேசங்கள் பாலைவனமாதலால் இறந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது சிறிலங்காவும் பாலைவனமாகும்நிலை தோன்றியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுவரை இயற்கைத்தாவரங்களின் அழிப்பு துரிதமாக நடைபெறுகின்றது. மனித நடவடிக்கைகளால் வகை தொகையின்றி காடுகள் அழிக்கப்படுகின்றன. தற்போது காலநிலையில் மாற்றமில்லாத போதும் மனிதனுக்குத் தெரியாமலேயே பாலைவனங்கள் உருவாகின்றன. அதனை தடுப்பதற்கு நாம் இப்போதே நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம்.

# வலுவிழந்தோருக்கு உதவும் சாதனங்கள்


இங்கிலாந்தில் நைடெக்ஸ் கண்காட்சியில் வைக்கப்பட்ட ஊனமுற்றோர் நீரில் மதிக்கக்கூடிய சாதனம் இது பற்றறிகள் மூலம் இயக்கப்படும் ஒருகருவியாகும். இது குளத்தில், அல்லதுகடலில் பயணிக்கக்கூடியது. ஊனமுற்றோருக்கு உதவக்கூடிய கருவியாகும்.






காதுகேட்காதவர்களின்பாதுகாப்புத் தேவைகருதி ஒரு புகைக்கின்ற எச்சரிக்கைக் கருவி உருவாக்கப்பட்டுள்ளது. இதுஅதிர்வுகளை ஏற்படுத்தக்கூடியதுடன், விட்டுவிட்டுத் திடீர்திடீரென ஒளியை ஏற்படுத்தக்கூடிய மின்விளக்குகளையும் கொண்டுள்ளது. இக்கருவி காது கேட்காதவர்களின் தலையணைகளில் பொருத்தப் பட்டு பயன்படுத்தப்படுகிறது. இதன் விலை 88 ஸ்ரேலிங்பவுன்களாகும்.

காதுகேளாதவர்களிற்காக பிரமிட்வடிவில் வடிவமைக்கப்பட்ட இக் கருவி கொண்டு செல்லக்கூடியது. இது மீளவும் மின்னேற்றக் கூடிய பற்றறிகளைக் கொண்டது. இதனைக் காது கேளாதவர்கள் கலந்துரையாடல்களின் போது தமது மேசைகளின்மேல்வைத்தும் பயன்படுத்தலாம் இதில் பலவகைகள் உள்ளன.





வலுவிழந்தவர்களிற்கு வாசிப்பதற்கு ஏதுவாக பக்கங்களைத் தானாகப் புரட்டும் கருவி. மூவாயிரம் ஸ்ரேலிங்பவுண் பெறுமதியில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கருவி மூலம் சிறியளவிலான பக்கங்கள் முதல் A4 அளவான பக்கங்கள் வரை புரட்டி ஒருவரது உதவியும் இன்றி வாசிக்கமுடியும்.

உடற்காயங்கள் ஏற்பட்டவரின் உடற்செயற்பாடுகளை அவதானிக்கக் கூடிய மணிக்கட்டில் அணியும் கருவி வடிவமைக்கப்பட்டுள்ளது. உடற்செயற்பாட்டில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டால் எச்சரிக்கை ஒலியை ஏற்படுத்தும் அதேவேளை அதிலுள்ள ஆழியை அழுத்துவதன் மூலம் யாரையும் உதவிக்கு அழைக்க முடியும்.



# மூளையின் அளவுக்கும் அறிவுக்கும் தொடர்புண்டு

மனிதனின் இயக்கத்தை வழிநடத்தும் மூளை சிலருக்கு சின்னதாகவும், சிலருக்கு பெரியதாகவும் இருக்கலாம். மூளை எப்படி இருந்தால் என்ன? அறிவு இருந்தால் சரி என்று நினைக்கிறோம். ஆனால் அது உண்மை இல்லை. மூளை அளவுக்கும், அறிவுக்கும் நெருங்கிய சம்பந்தமுள்ளது.

அதாவது மூளை அளவு பெரிதாக இருந்தால் அத்தகைய நபர்கள் மிகவும் அதிபுத்திசாலிகளாக இருப்பதாக ஜேர்மனியைச் சேர்ந்த பிரபல மருத்துவ நிபுணர் டாக்டர் மைக்கேல் ஏ.மக்டேனியல் கூறியுள்ளார். ஒரு மனிதனின் தனிப்பட்ட அறிவுத்திறன் என்று எடுத்துக் கொண்டால் அது அவனுடைய மூளையின் அளவைப் பொறுத்து அமைகிறது என்கிறார் இவர். இதில் வயது ஒரு விஷயமே அல்ல. வெவ்வேறு மூளை அளவுகள் கொண்ட சிலரை வைத்து இவர் ஒரு ஆய்வு நடத்தினார். அப்போது அறிவுக்கு வேலை வைக்கும் விதவிதமான தேர்வுகள் வைத்ததில் பெரிய மூளை இருக்கும் நபர்கள் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமான திறமையை வெளிப்படுத்தினார்கள்.

# பக்கவாதநோயை முன்கூட்டியே அறிய

## எளிய இரத்தப் பரிசோதனைமுறை

பொதுவாக இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு போன்ற ஆபத்துக்களை வைத்துக் கொண்டு ஒருவருக்கு பக்கவாத ஆபத்து இருக்கிறதா? இல்லையா? என்பதை முன்கூட்டியே கணித்து விடமுடியும். ஆனால் வழக்கத்தில் அல்லாது வேறு காரணிகள் இருந்தால் பக்கவாதத்தை முன்கூட்டியே தெரிந்து கொள்வதில் சிரமம் இருந்தது. சில குறிப்பிட்டநோயாளிகளுக்கு மட்டுமே இந்தப் பிரச்சினை காணப்படும்.

இந் நிலையில் மேற்படி நோயாளிகளுக்கும் பக்கவாத ஆபத்தை முன்கூட்டியே கணிக்கும் ஒரு எளியஇரத்தப் பரிசோதனை முறையை அமெரிக்க மருத்துவ வல்லுநர்கள் கண்டுபிடித்துள்ளனர். அந்தசோதனைக்கு PLAC என்றுபெயர். அமெரிக்காவின் உணவுகள் மற்றும் மருந்துகள் நிர்வாகத் துறை இதற்கு அனுமதி அளித்துள்ளது. இந்த சோதனையைப் பயன்படுத்தி ஐஸ்மிக் பக்கவாத ஆபத்தை முன் கூட்டியே தெரிந்துகொள்ள முடியும்.


மேற்படி சோதனையின் போது இரத்தத்தில்உள்ளLP-PLA2 என்ற என்சைம் அளவு கணக்கிடப்படும் (இந்தஎன்சைமுக்கும்,பக்கவாதத்துக்குவழக்கமான காரணிகளான இரத்த அழுத்தம், உடல் பருமன், நீரிழிவு, சி-ரியாக்டிவ் புரோட்டீன், புகைப்பழக்கம் ஆகியவற்றுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.) இதில் இயல்பான அளவைக் காட்டிலும் இது கூடுதலாக காணப்படுமானால், அத்தகைய நபர்களை ஐஸ்மிக் பக்கவாதம் தாக்க வாய்ப்புள்ளது. இதன் மூலம் குறிப்பிட்ட நபரை முற்கூட்டியே பக்கவாத ஆபத்தில் இருந்து காப்பாற்ற முடியும்.

ஐஸ்மிக் பக்கவாதம் (ISCHEMIC STROKE) என்றால் என்ன? மூளைக்கு இரத்தம் கொண்டு செல்லும் இரத்த நாளங்களில் அடைப்பு உருவானாலோ அல்லது அவை கடினமானாலோ, இரத்த ஓட்டம் தடைப்பட்டு பக்கவாதம் ஏற்படும். இரத்த நாளங்களில் அடைப்பு ஏற்படுவதும், கடினமாவதும் மாரடைப்புக்கும் காரணம் என்பதும் ஏற்கனவே அறிந்ததே.

## கண்டுபிடிப்பவருக்கு பரிசு

### நாசா அறிவிப்பு

சந்திர மண்டலத்தில் சுவாசிக்கக்கூடிய ஒக்சிசன் வாயுவைப் பிரித்தெடுக்கும் வழியைக் கண்டுபிடிக்கும் விஞ்ஞானி யாராக இருந்தாலும் அவர்களிற்கு 250,000 டொலர்களை வழங்க உள்ளதாக அமெரிக்க விண்வெளி ஆய்வுமையமானநாசா அறிவித்துள்ளது. இப்போட்டி நாசாவின் ''நூறுவருடச்சவால்கள்'' என்ற தொடரில் கடைசியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இச் சந்திர மண்டலப்பரிசினைப் பெறுவதற்கு ஒருவிஞ்ஞானி எரிமலைச்சாம்பலினாலான போலி சந்திர மண்ணிலிருந்து எட்டு மணித்தியாலத்தில் ஐந்து கி.கிராம் சுவாசிக்கத்தக்க ஒக்சிசனைப் பிரித்தெடுக்க வேண்டும் இதுவே போட்டிநிபந்தனையாகும்.



உலகில் தொழில்நுட்பங்களின் நவீன கண்டுபிடிப்புக்கள் அதிகரிப்பதால் றோபோக்களின் வளர்ச்சியும் அதிகரித்தும் மாற்றமடைந்தும் வருகின்றன. அதன்படி யப்பானிய நிறுவனமொன்று பல்வேறு வகையான றோபோக்களை காட்சிப்படுத்தியுள்ளது. இங்கு முதலாவது படத்தில் றோபோ நாய்களையும், இரண்டாவது படத்தில் இசைக்கருவிகளை இயக்கும் றோபோக்களையும், மூன்றாவது,நாலாவது படங்களில் முறையே விளையாட்டிலும், மைதான சுத்திகரிப்பு பணிகளில் ஈடுபடும் றோபோக்களையும் காணலாம்.

யாழ்ப்பாணம்

# கனடாவில் தமிழ் மொழி வாரம்



## தொடக்க உரை

### தமிழ்க்கலைத் தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் சு. இராசரத்தினம் அவர்களின் தொடக்க உரை

பேரன்புமிக்க பெரியோர்களே!

புலம்பெயர்ந்து கனடாவில் குடியேறியுள்ள தமிழினம், குறிப்பாகப் பெருமளவில் தமிழீழத்தில் இருந்து வந்து குடியேறியுள்ள தமிழராகிய நாம், கனடாவில் தமிழ்மொழி வாரத்தினை இவ்வருடம் 26.06.2005 முதல் 02.07.2005 வரை கொண்டாடுகிறோம் தமிழ்மொழி மேம்பாடு, தமிழ்மொழிக் கல்வி, தமிழியல் ஆய்வு போன்ற துறைகளில் எல்லோரது கவனத்தையும் ஈர்ப்பதாகத் தமிழ்மொழி வார நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டன. இவ்விழாவானது இம்முறை ரொறன்ரோ நகரை மையப்படுத்தி ஆரம்பிக்கப்பட்டபோதும் அடுத்த ஆண்டு வட அமெரிக்கா தழுவி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அத்தோடு உலகத்தின் பல நாடுகளிலும் நடத்தப்படுவதன் அவசியத்தை உணர்ந்து பணி தொடரப்படும்.

ஓர் இனத்தின் உயிர்ப்பின் இருப்பாக, ஆணிவேராக அமைந்திருப்பது அந்த இனத்தின் மொழியேயாகும் அந்த உண்மையின் அடிப்படையில் தமிழ்மொழி வாரத்தின் பொன்மொழியாகத் "தமிழின் வாழ்வே தமிழர் வாழ்வு" என்ற வாசகத்தை முன் நிறுத்தியுள்ளோம்.

ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில் புலம்பெயர்ந்து தமிழினம் பல்வேறு நாடுகளிலும் குடியேறியது. குடியேறிய நாடுகளில் தமிழ்மொழியைப் பேசி வரும் தமிழர் மிகச்சிறப்போடு இருப்பதும், மொழியைக் கைவிட்டவர்கள் உலக சமூக அமைப்பில் தாழ்ந்திருப்பதும் வரலாறு எமக்குக் கற்றுத் தந்த பாடமாகும்.

இலங்கைத் தீவில் அடக்குமுறைக்கும் இன அழிப்புக்கும் ஆளான எம்மினம் தனது இருப்பை, வாழ்வை, தனித்துவத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்கான போராட்டத்தைத் தொடங்கியது. இக்கால கட்டத்தில் தமிழினம் புலம்பெயர்ந்து பல நாடுகளிலும் குடியேறியது. குடியேறிய நாடுகளில் நமது அடையாளத்தைத் தொடர்ந்து பேணுவதற்குத் தமிழ்மொழிக் கல்வியே அடிப்படையானது என்பதை உணர்ந்த எமது அமைப்பு, தமிழ்மொழிக் கல்வியையும், தமிழர் தம் கலைகளையும் கற்பிப்பதற்கான கல்வி நிறுவனங்களை அமைத்துக் கொண்டது.

அந்த வகையில் கனடாவிலும் எமது கல்லூரி செயற்பட்டு வருகிறது. மழலைகள் வகுப்பு முதல் தமிழியல் இளங்கலைப் பட்டப்படிப்பு வரை தமிழ்மொழியைக் கற்பித்து வருகின்றது. புலம்பெயர் சூழலுக்கு ஏற்ப பாடத்திட்டமும் அதற்கேற்ப நூல்களும் அமையப் பெற்றுள்ளன.

பல்கலைக்கழக நுழைவுக்குத் தமிழ்மொழியையும் ஒரு பாடமாகக் கொடுக்கலாம் என்ற நிலையும் உண்டு. எமது கல்லூரி தவிர்ந்த பல அரச கல்விச் சபைகளும், தனியார்களும் தமிழ்மொழியைக் கற்பித்து வருகின்றனர். இதற்கும் மேலாகப் பல்கலைக்கழகத்திலும் தமிழ்மொழியையும் தமிழியலையும் கற்பிப்பதற்கான முயற்சிகள் ஊக்கமிக்க இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வாறான வாய்ப்புக்கள் கனேடிய மண்ணில் இருந்தும் கூட பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் தமிழ்மொழியைக் கற்கவில்லை என்பதே கசப்பான உண்மை.

இதனால் எம்மினம் அடையப்போகும் தீமைகள் எவை என்பதனைக் கடந்த நூற்றாண்டுகளில் புலம்பெயர்ந்த தமிழ் இனத்தின் வரலாற்றினூடு கண்டுகொண்டோம். மேலும், அத்துடன் தமிழ் மொழியைக் கற்காத குடும்பங்களில் பெற்றோர்கள், பிள்ளைகளுக்கிடையே இயைந்த வாழ்க்கை இல்லாது இருப்பதையும் காண்கின்றோம். எனவே, மொழி கற்பதை முன் நிறுத்துவதே தமிழ்மொழி வாரத்தின் முதன்மை நோக்காகும்.

உயர் விழுமியம் மிக்க தமிழர் வாழ்வியல் முறைகளைத் தொடர்ந்து கடைப் பிடிப்பதில் உள்ள சிக்கல்களில் இருந்து விடுபட்டு எமது இனம் மேம்பாடு அடைய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இவ்வமைப்பின் நோக்கம்.

தமிழர் மேம்பாட்டை ஒரு தனியாளோ அல்லது ஓர் அமைப்போ முழுமையாக முன்னெடுக்க முடியாது. எனவே, கனேடியத் தமிழரிடையே இருக்கின்ற அனைத்து அமைப்புகளையும் இப்பணியில் இணையுமாறு கேட்டுக் கொண்டோம். பல அமைப்புகள் கலந்து கொண்டன. நாம் எல்லோரும் இணைந்து இதற்கான ஒரு குழுவை அமைத்துள்ளோம். இணைந்து கொள்ளாத அனைத்துக் கனேடியத் தமிழர் அமைப்புகளையும் இணைந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மொழி வாரம் ஒன்றை மட்டும் நடத்திவிட்டு ஓய்ந்து விடுவதல்ல எம் நோக்கம். தாய்மொழியாகவும் வாய்மொழியாகவும் தமிழே துலங்க வேண்டும் என்பது எமது குறிக்கோளாகும். தமிழ்மொழியோடு பிரிக்க முடியாதபடி இணைந்து செல்லும் தமிழர் வாழ்வியலே எமது நடைமுறையாக வேண்டும்.

இந்நோக்கோடு நாம் தொடர்ந்து செயற்படத் "தமிழ் மேம்பாட்டுக் கழகம்" என்ற பெயரில் ஓர் அவையை அமைத்துள்ளோம். இதன் செயற்பாடுகளைக் காலப் போக்கில் அறியத் தருவோம்.

ஒன்றாக இணைந்து உறுதியோடு செயற்பட அனைவரையும் அழைக்கின்றோம். தொடர்ந்து நடைபெற இருக்கும் ஏழு நாள் விழாவிலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

எம்மிடையே இருக்கும் ஊடகங்கள் தமிழ்மொழி வாரத்துக்கு மிகுந்த ஆதரவை நல்கியுள்ளன. அவர்கள் அனைவருக்கும் எமது பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பலர் இவ்விழா வெற்றிபெற நிதி உதவி செய்திருக்கின்றனர். நிதி இன்றி நாம் எதனையும் செய்ய முடியாது. அவ்வள்ளல்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நிறைவாக, எம்மோடு தோளாடு தோளாக நின்று செயற்பட்டுவரும் பல பெரியவர்கள், அறிஞர்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் அனைவரின் சார்பாகவே நான் இக்குறிப்பினை வெளியிடுகின்றேன். அவர்கள் அனைவருக்கும் என் உளம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். வாழ்க தமிழ். வளர்க தமிழ்.

---



## தமிழராய் இருப்போம்

தமிழ்மொழி வாரம் நிகழ்த்தும் கனடா வாழ் தமிழ் மக்களின் மொழிப்பற்றுக்குத் தலை வணங்குகிறேன். கருத்தை வெளிப்படுத்தும் ஒரு கருவி மட்டுமே மொழி அதற்கு மேல் மொழிக்கு எந்தச் சிறப்புமில்லை என்பது தவறு. மாந்தர் உறவுக்கும் - கலை, பண்பாடு போன்றவற்றின் உருவாக்கத்துக்கும் - உழைப்புக்கும் - மாந்தர் உயர்வனைத்துக்கும் உயிரானது மொழியே.

இதனால்தான் எல்லோருமே தங்கள் தாய்மொழியை இன்னுயிர் என்கிறார்கள்.

தமிழுக்கு அமுதென்று பேர்!

தமிழின்பத் தமிழெங்கள்

உயிருக்கு நேர்!

என்றார் பாரதிதாசன்.

உருசிய மொழியோடு செய்தி இதழ்களில் பிறமொழிச் சொற்கள் கலப்பதைக் கண்டு நொந்த உலகப் புரட்சியாளர் லெனின், என் தாய் மொழியில் பிறமொழிச் சொற்கள் கலப்பதைப் பார்க்கும் போது சினமாக இருக்கிறது எதிர்த்துப் போராட வேண்டும் போல் தோன்றுகிறது என்று உறுமினார்.

### கவிஞர் காசி ஆனந்தன் அவர்களின் ஆசியுரை

நாளை என் அவர் மொழி

இறக்குமானால்

இன்றே நான் இறந்து விட

விரும்புகிறேன்

என்றான் தசுக்கித்தான் பாவலன் இரசூல் அம்சத்தொவ்.

தாய்மொழியாம் தமிழை உலகெங்கும் சிதறி வாழும் ஈழத் தமிழர்கள் நெஞ்சிலும் நாவிலும் பொழுதெல்லாம் தாங்க வேண்டும்.

முற்றிலும் பிற இனத்தாரோடு கலந்த வாழ்க்கை கொண்ட அவர்கள் மொழி மாறி இனம் மாறிப் போய்விடாது தடுத்தல் ஈழத்தமிழரிடையே வாழும் தமிழுணர்வாளர்தம் முதற் கடமை.

பிறமொழி கலக்காத தூய தமிழில் வீடுகளில் பிள்ளைகளோடு பெற்றோரும் - பெற்றோரோடு பிள்ளைகளும் உரையாட வேண்டும்.

தமிழை எழுதவும் படிக்கவும் தமிழ்ப் பிள்ளைக்குக் கற்றுக் கொடுங்கள்.

காகத்தின் கூட்டில் குயிலின் குஞ்சுகள் வளர்ந்தாலும் அவை காகத்தின் மொழியில் கத்துவதில்லை. காது கொடுத்துக் கேளுங்கள்.

இன்னொருவனாய்த் தமிழன் கரைந்து போகாமல் இன்றே தடுப்போம்.

தமிழீழம் மலரும் நாள் தொலைவில் இல்லை.

திரும்புவோம் - ஆங்கிலேயனாய் பிரெஞ்சுக்காரனாய் செருமானியனாய் அல்ல- தமிழனாய் - நாடு திரும்புவோம்!

---

## தமிழ்மொழி வார உறுதி மொழி

தமிழ்க்கலை-தொழில்நுட்பக் கல்லூரியும் ஏனைய கனேடியத் தமிழ் நிறுவனங்களும் இணைந்து தமிழ்மொழி வாரத்தை 26.06.2005 தொடக்கம் 02.07.2005 வரை கொண்டாகின்றனர். தமிழ்மொழி மேம்பாடு, தமிழ்மொழிக் கல்வி, தமிழியல் ஆய்வு போன்ற துறைகளில் எல்லோரது கவனத்தையும் ஈர்ப்பதாக தமிழ்மொழி வார நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டன. "தமிழின் வாழ்வே தமிழர் வாழ்வு" எனும் குறிக்கோளோடு தமிழ் மொழி வாரம் ரொறன்ரோவில் 26.06.2005 அன்று தொடங்கியது.

தமிழர் பெருமளவில் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் கனடாவின் ரொறன்ரோ மாநகரம் ஒரு சிறப்பான தமிழ் நடுவமாக அமைகிறது. இங்கு இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான தமிழர் வாழ்வதாகக் கணிப்புகள் கூறுகின்றன. தமிழ்க்கலை-தொழில்நுட்பக் கல்லூரி, ரொறான்ரோ கல்விச் சபை, கத்தோலிக்கக் கல்விச்சபை போன்றவற்றுக்கூடாக 10 000 மாணவர்கள் இப்பொழுது தமிழைப் பயின்று வருகின்றனர். 550 தமிழ் ஆசிரியர்கள் ரொறன்ரோவில் பணிபுரிகின்றனர். எனினும் இந்த எண்ணிக்கை தமிழ்மொழிக் கல்வியை விரிவாக்குவதற்குப் போதுமானது அல்ல. தமிழ்மொழிக் கல்வியையும் தமிழ்மொழி வளத்தையும் மேலும் பரவலாக்க நாம் கடுமையான முயற்சியில் ஈடுபட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.

புலம்பெயர்வால் ஏற்படும் பண்பாட்டு மாற்றங்களில் முதலில் நிகழ்வது மொழி இழப்பாகும். தமிழ்மொழிப் பயன்பாட்டை உயிரோட்டத்தோடு அடுத்து வரும் தலைமுறைக்குக் கையளிக்க வேண்டுமாயின் புலம்பெயர்ந்த நாடுகளிலும் அதற்கான முயற்சி செய்வதும் அதில் வெற்றி பெறுவதும் இன்றியமையாததாகும்.

தமிழ்மொழியைப் பல தலைமுறைக்கும் நிலைத்து நிற்கச் செய்வதில் கனடாவில் வாழும் நாம் முன்னோடிகளாகத் திகழ்வோம். அந்தக் கடமையை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கான செயற்பாடுகளில் ஈடுபடுவோம்.

தமிழ்மொழியைப் பேணுவதும் புலம்பெயர்ந்த சூழலில் அதனை அடுத்த தலைமுறைக்குத் திறன்மிக்க முறையில் கொண்டு செல்வதும் எம்முன்னுள்ள பெரும் அறைகூவலாகும். இந்த அறைகூவலில் வெற்றி பெற நாம் அனைவரும் இணைந்து பணிபுரிவோம். இதனை வலியுறுத்தவும் தமிழ் மொழிக் கல்வியைக் கனடாவில் பரவலாக்கவும் வேண்டித் தமிழ்மொழி வாரத்தை ஆண்டுதோறும் கொண்டாடுவோம்.

தமிழ்மொழி வாரத்தில் முற்கூறிய நோக்கங்களை நிறைவேற்ற நாம் அனைவரும் உறுதி கொள்வோம்.

தமிழ்மொழி மேம்பாட்டுக்காகப் பின்வருவனவற்றைக் கடைப்பிடிக்க உறுதி கொள்வோம்:

- ௦5 ஆம் ஆண்டு முடிவதற்குள் கனடாவில் 30,000 மாணவர்கள் தமிழ்மொழி கற்பதைஉறுதிப்படுத்துவோம்.
- எங்கள் பிள்ளைகளைத் தமிழ் வகுப்பில் சேர்ப்போம்.
- தமிழ்மொழியை வீட்டு மொழியாகப் பயன்படுத்த உறுதி கொள்வோம்.
- பெற்றோரும் பிள்ளைகளும் தம்மிடையே தமிழிற் பேசுவதை உறுதி செய்வோம்.
- நாம் அனைவரும் முடிந்தவரை பிறமொழி விலக்கித் தமிழைப் பயன்படுத்துவோம்.
- எமது வாழ்வியலில் தமிழ்மொழிப் பயன்பாட்டுக்கு முதன்மை அளிப்போம்.
- தமிழ்நூல்களை விலை கொடுத்து வாங்கி வீட்டுக்கொரு தமிழ் நூலகம் அமைப்போம்.
- தமிழ் கற்பது பற்றி நிலவும் ஐயங்களை நீக்குவோம்.
- தமிழை முறையாகக் கற்பிப்பதில் நிலவும் குறைபாடுகளை அகற்றுவோம்.
- பல்கலைக்கழக நுழைவுக்கு ஒரு பாடமாகத் தமிழ் மொழியைக் கற்க முடியும் என்னும் செய்தியைப் பரப்புவோம்.
- தமிழியற் துறையைக் கனேடியப் பல்கலைக் கழகத்தில் நிறுவுவதற்கு உழைத்து வரும் தமிழ்ப் பல்கலைக்கழக மாணவரை ஊக்கப்படுத்தி அவர்களுக்கு உதவுவோம்.
- தமிழ் நுண்கலைகளைப் பயிற்றுவிப்போர் தமிழ் மொழியைப் பயிற்று மொழியாகப் பயன்படுத்துவதை ஊக்குவிப்போம்.
- தமிழ்மொழி வார நிகழ்வுகளில் ஊக்கமுடன் பங்குபற்றுவோம்.
- தமிழ் இதழியலாளர் தமிழ்மொழி வாரச் சிறப்பிதழாகத் தமிழ்மொழி பற்றி அறிவூட்டும் ஆக்கங்களை வெளியிடுவதையும் தமிழ்த் தொலைக்காட்சிகள் அவற்றை ஒளிபரப்புவதையும் தமிழ் வானொலிகள் அவற்றை ஒலிபரப்புவதையும் உறுதி செய்வோம்.

**தகவல் சோ. எழிலன்**

(கனடாவிலிருந்து....)

# பொதுக்கட்டமைப்பு கைச்சாத்து சுவிஸ் அரசு வரவேற்பு

(கொழும்பு)

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடப் பட்டுள்ளதை. சுவிஸ் அரசு வரவேற்றுள்ளது. கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் முதல் முறையாக தேசிய, பிரதேச, மாவட்ட அளவில் இணைந்து செயலாற்ற முன்வந்துள்ளனர். இந்த கட்டமைப்பின் மூலம் ஆழிப் பேரலையால் அழிந்தவை மீளமைக்கப்பட்டுவிடும் என்ற நம்பிக்கைஉருவாகியுள்ளது. குறிப்பாக ஆழிப்பேரலையால் பெரிதும் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு இது உதவியாக அமையும். கட்டமைப்பை விரைந்து செயற்படுத்தி பாதிக்கப்பட்ட மக்களின் அவசர தேவைகளை நிறைவு செய்யுமாறு அனைத்து தரப்பினரையும் கேட்டுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# அரசகுமாரின் படுகொலைக்கு தமிழ்க் கூட்டமைப்பு கண்டனம்

தென் தமிழீழத்தில் வெளிவரும் ஒரேயொரு தினசரிப் பத்திரிகையான ஈழநாதம் பத்திரிகையின் விநியோகப் பணியாளரான கண்ணமுத்து அரசகுமார் படுகொலை செய்யப்பட்டுள்ளதை மட்டக் ளப்பு, அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் வன்மையாகக் கண்டித்துள்ளனர். இந்தக் கொ ன முழுப் பொறுப்பையும் அரச படையினரே பொறுப்பேற்க வேண்டு ம் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட த ழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராசசிங்கம், பா.அரியநேத்திரன், த.கனகசபை, க.தங்கேஸ்வரி, எஸ்.ஜெயானந்தமூர்த்தி, க.பத்மநாதன் ஆகியோர் கூட்டாகஅறிக்கை ஒன்றையும் விடுத்துள்ளனர்.




## முல்லைத்தீவு – ஒட்டுசுட்டான் தான் தோன்றீஸ்வரர் தேவஸ்தானம்

## நவகுண்டபக்ஷ புனராவர்த்தன பிரதிஷ்டா

# மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

கர்மாரம்பம்: 07-07-2005 | கும்பாபிஷேகம்: 13-07-2005 | எண்ணைக்காப்பு: 11,12-07-2005

**சிவனடியார்களே!**

ஸ்ரீமத் தட்சனகைலாசம் எனப் போற்றப்படும் இலங்கா தீவகற்பத்தில் வடபால் முல்லைத்தீவு மாநகரத்தில் சகல வளங்களும் ஒருங்கே அமைந்த ஒட்டுசுட்டான் எனும் புண்ணிய ஷேத்திரத்தில் பூமி வாழ் மக்களின் இடர்களை தீர்க்கும் பொருட்டு, தான்தோன்றீஸ்வராய் உதித்து கேட்பவர்களுக்கெல்லாம் கேட்கும் வரம் அருளிக்கொண்டிருக்கும், பூலோகநாயகி சமேத வேகாவனேஸ்வர் பெருமானுக்கும், ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும், நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம்உத்தராயணம் ஆனித்திங்கள் 29 ஆம் நாள் புதன்கிழமை (13 -07-2005) சுக்கிலபட்ச சப்தமி திதியும், உத்தர நட்சத்திரமும், கன்னிராசியும் மிதுன லக்கினமும் புதஹோரையும் கூடிய காலை 6.00 மணி முதல் 6.48 மணி வரையுள்ள சுபயோக சுபதின சுபவேளையில் மகா கும்பாபிஷேகம் இடம்பெற திருவருள் கூடியுள்ளது. இவ்மகா கும்பாபிஷேகத்திலும், பூர்வாங்க கிரியைகளிலும் அடியார்கள் பங்குபற்றி சிறப்பித்து எம் பெருமான் அருள்பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

(சி-12272) **முகாமைத்துவ சபை.**

# 5ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்



தாயின் மடியில் 28 - 03 - 1976

தாயக மண்ணில் 15 - 05 - 2000

**தமிழீழ காவல்துறை**
**தலைமைக் காவலர் இசைப்பிரியன்**
**இராசரத்தினம் இசைப்பிரியன்.**
புதுமாத்தளன்,
முள்ளிவாய்க்கால்,
முல்லைத்தீவு



தாயின் மடியில் 19 - 04 - 1972

தாயக மண்ணில் 15 - 05 - 2000


**தமிழீழ காவல்துறை**
**தலைமைக் காவலர் கணேசலிங்கம்**
**சிதம்பரம் கணேசலிங்கம்.**
கெருடாவில் தெற்கு,
தொண்டமனாறு.



தாயின் மடியில் 22 - 09 - 1976

தாயக மண்ணில் 29 - 05 - 2000

**தமிழீழ காவல்துறை**
**உறுப்பினர் விமலச்செல்வன்**
**ஜெயராசா விமலச்செல்வன்.**
செல்விபுரம், மூலையடம்பன்,
பூநகரி.



தாயின் மடியில் 22 - 12 - 1976

தாயக மண்ணில் 01 - 06 - 2000

**தமிழீழ காவல்துறை**
**பரிசோதகர் ஜெயப்பிரகாஸ்**
**நாகேஸ்வரன் ஜெயப்பிரகாஸ்.**
04ஆம் வட்டாரம்,
சாம்பல்தீவு,
திருகோணமலை.

ஒளி பிறக்கும் நம்பிக்கையோடு - அண்ணன்
வழி நடந்த தோழர்களே
களிகூரும் காலம் கனிகின்ற வேளை பார்த்து - மண்ணில்
விழி மூடிப் போனீர்களே

பழி சூழ்ந்த வேளையிலும் துணிந்தீர்களே - அண்ணன்
விழி சிவந்த போதினில் பகை எரித்தீர்களே
அழியாத புகழ்படைக்க களம் ஏகினீர்களே - தமிழினம்
அழிவாகிப்போகின்ற வேளையிலும் புலியாகினரே

விழி மூடும் போதினிலும் எதை நினைத்தீரோ - அண்ணன்
விழிஅசைவில் பகை அழிக்க வழி நினைத்தீரோ
களிப்போடு தாய் மண்ணை முத்தமிட்டீரோ - மண்ணில்
விழிப்போடு நாம் வாழும் வழி உரைத்தீரோ

மலர்தூவி கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்- உங்கள்
மலர் பாதம் தாய் மண்ணில் பதித்த தடம் நோக்குகின்றோம்
பலர் கூடி பலமாக தலைவன் கரம் பிடிப்போம்- உங்களில்
மலர்ந்த இலட்சியப் பாதையில் நாங்கள் தொடர்வோம்.

**ஓயாத அலை-03 இராணுவ நடவடிக்கையின்போது, கிளாலி, எழுதுமட்டுவாள் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலின்போது வீரச்சாவடைந்தனர்.**
**இம்மாவீரர்களுக்கும் இந்நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும்எமதுவீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்**

(6312) **தமிழீழ காவல்துறையினர்.**

# இந்தியா-அமெரிக்கா இடையே இராணுவ ஒப்பந்தம் நீடிக்கப்படுகிறது

இந்தியா- அமெரிக்கா இடையே உள்ள இராணுவ ஒப்பந்தத்தை மேலும் பத்து ஆண்டுகளுக்கு நீடிக்க இருநாட்டு இராணுவ தரப்புகளும் முடிவெடுத்துள்ளன.

இந்திய இராணுவ மந்திரி பிரணாப் முகர்ஜி அமெரிக்கா சென்று வோஷிங்டன் நகரிலுள்ள அமெரிக்க இராணுவ தலைமை அலுவலகத்தில் அமெரிக்க இராணுவ அமைச்சர் டோனால்ட் ரம்ஸ்பீல்டை சந்தித்து இருநாட்டு இராணுவ உறவு பற்றி விரிவாக ஆலோசனை நடத்தினார். இச்சந்திப்பில் தற்போது இரு நாடுகளுக்கும் இடையே உள்ள இராணுவ ஒப்பந்தத்தை மேலும் பத்து ஆண்டுகளுக்குப் பலப்படுத்த முடிவு எடுக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து புதுப்பிக்கப்பட்ட " இந்தியா-அமெரிக்க இராணுவ உறவு" ஒப்பந்தத்தில் இருநாட்டு இராணுவ மந்திரிகளும் கையெழுத்திட்டனர். இதன்படி இரு நாடுகளும் ஏவுகணைத் தொழில்நுட்ப பரிமாற்றம் செய்து கொள்ளப்படும் அதிநவீன அமெரிக்க தொழில்நுட்பம் இந்தியாவுக்குக் கிடைக்கும்.

இராணுவ தளபாட மற்றும் கருவிகள் கூட்டு உற்பத்தியும் செயற்படுத்தப்படும் இராணுவ தளபாட சோதனை மதிப்பீடு ஆகியவையும் கூட்டாகச் செய்யப்படும்.

இராணுவ தளபாட கொள்முதல செய்யவும், இந்த ஒப்பந்தம் வழிவகுக்கும் வளர்ச்சி, ஆராய்ச்சி, கடற்படை விமானிகளுக்குப் பயிற்சி ஆகியவையும் நடைமுறைப்படுத்தப் படுவதோடு, தீவிரவாதத்தை ஒழிப்பதில் இரு நாடுகளும் கூட்டாகச் சேர்ந்து செயற்படவும், தரைவழியாகவும், வான்வழியாகவும், கடல்வழியாகவும் தீவிரவாதத்தை ஒடுக்க நடவடிக்கை எடுக்கவும் இந்த ஒப்பந்தம் துணைபுரியுமென இந்திய இராணுவ வட்டாரங்கள் கூறுகின்றன.

# என்னைக் கேலி செய்வதனால் எனக்கு எதுவித பாதிப்பும் ஏற்படாது

**-லல்லூப் பிரசாத் யாதவ்**

தொலைக்காட்சி பத்திரிகைகளில் என்னைக் கேலி செய்வதாலும் எனது உருவம் போன்ற பொம்மைகளை விற்பதாலும் எனக்கு மூளையில இரத் தக்கசிவு ஏற்பட செய்ய முடியாது என்று இந்திய மத்திய அமைச்சர் லல்லுப்பிரசாத் கூறினார்.

இந்திய ரயில்வே அமைச்சர் லல்லுப்பிரசாத் கருத்தரங்கு ஒன்றில் பேசியதாவது;

எனது எதிரிகள் பல்வேறு வழிகளில் என்னை நையாண்டி செய்கிறார்கள். என் உருவத்தைப் போன்ற பொமமைகளைச் செய்து விற்பனைக்கு வெளியிட்டிருக்கிறார்கள். ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் என்னைக் கிண்டலடித்து இருக்கிறார்கள்.

நான் பீகார் மாநில கிரிக்கெட் சங்கத் தலைவராகத் தேர்ந்து எடுக்கப்பட்ட போது எருமை மாடுகள் போடும் பந்தை நான் நின்று மட்டையால் அடிப்பது போன்று கேலிச்சித்திரம் வெளியிட்டிருந்தார்கள். எனது உருவத்தைப் போன்று கையில் லாந்தர் விளக்கு (எனது கட்சியின் சின்னம்) ஏந்திய பொம்மைகளை நான் தயாரித்து விற்பனைக்கு விட்டதாக செய்தி பரப்பினார்கள். பீகார் சட்டசபைத் தேர்தலையொட்டி அந்தப் பொம்மைகளை நான் வெளியிட்டதாகக் கூறினார்கள். உண்மையில் மும்பையிலுள்ள வர்த்தக நிறுவனம் தான் அந்தப் பொம்மைகளைத் தயாரித்து விற்பனைக்கு விட்டது. அது கூட எனது எதிரிகளுக்குப் பாதகமாகப் போய்விட்டது. அந்தப் பொம்மைகள் அமோகமான விற்பனையாகியுள்ளன. அந்தப் பொம்மைகளுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டு தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாம். குழந்தைகள் லல்லு பொம்மை வேணடும் என்று அடம் பிடிக்கின்றார்களாம்.

நான் ரயில்வே அமைச்சராக நியமிக்கப்பட்ட போது கூட சாச்சைகளை ஏற்படுத்தினார்கள். உண்மையில் நான் உள்துறை அமைச்சராகத்தான் விரும்பினேன். ஆனால் ரயில்வே இலாகாதான் கிடைத்தது. நான் உள்துறை அமைச்சராகி இருந்தால் நாட்டில் அமைதியை ஏற்படுத்தியிருப்பேன்.

என்னைப்பற்றி ஏன் இவ்வாறு கேலி கிண்டல்களையும் வேண்டாத வதந்திகளையும் பரப்பி வருகின்றார்களோ தெரியவில்லை. அதே சமயம் இப்படி நையாண்டி செய்வதால் எனக்கு மூளையில் இரத்தக்கசிவு ஏற்பட்டு விடாது எனவும் அவர் தெரிவித்தார்.


## கரைச்சி தெற்கு கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி

## அறிவித்தல்

கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் (19) பத்தொன்பது நிர்வாகக் கிளைகளிலும் கிளைக்குழுத்தேர்தலில் வாக்களிக்க தகுதியுடைய உறுப்பினர்களின் பட்டியல்கள் 01. 07. 2005 ஆம் திகதி தொடக்கம் 10. 07. 2005ஆம் திகதிவரை அந்தந்தக் கிளை நிலையங்களிலும் கிளை நிலையங்கள் இல்லாதவற்றின் பட்டியல்கள் தலைமை அலுவலகத்திலும் கடமை நேரங்களில் அங்கத்தவர் பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளது. எனவே காட்சிப்படுத்தப்பட்ட பட்டியலில் உறுப்பினர்களின் பெயரில் அல்லது பங்குப்பணத்தொகையில் அல்லது வேறு விதத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டியிருப்பின் அது பற்றிய ஆட்சேபனைகளை சங்கச் செயலாளருக்கு 17. 07. 2005 ஆம் திகதிக்குமுன் அறிவிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்,
கரைச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கம்,
கிளிநொச்சி,

(சி-12245)

## YOGI'S

ACADEMY OF BEAUTY CULTURE HAIR DRESSING
and HOME SCIENCE

03.07.2005 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணி CAKE EXHIBITION தொடர்பான கருத்தரங்கு நடைபெற உள்ளதால் பயிற்சியை முடித்த மாணவிகள் அனைவரும் இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ஆசிரியை 75, அம்மன் ரோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்
நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவில் முன்பாக,

(5385)

## அழகக சங்கம் கிளிநொச்சி

01.07.2005 இல் இருந்து கிளிநொச்சி அழகக சங்கத்தால் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது என்பதனை அனைவருக்கும் அன்புடன் அறியத் தருகிறோம். இதன் பின்னர் 1-21 வரையான கட்டணவிபரம் வருமாறு

**அழகக சங்கம்~கிளிநொச்சி**

01) முடியுடன் முகம் சீராக்கல் -80/=
02) முடிமட்டும் -60/=
03) முகம் சீராக்கல் -40/=
04) குழந்தைகளுக்கு -40/=
05)சிறுவர்களுக்கு -50/=
06) முடிவெட்டி தாடி ஒதுக்க -90/=
07)பெண்களுக்கு -80/=
08) தலை மசாச் செய்தல் -40/=
09) நவரத்தினா மசாச் -50/=
10)முடியுடன் முகம் சீராக்கல் மசாச் - 90/=
11)முடியுடன் மசாச் -80/=
12) முடியுடன் முகம் சீராக்கல் நவரத்தினா மசாச் -120/=
13)கீற்றர் பிடிக்க -40/=
14)டை அடிக்க -180/=
15)முடி வளிக்க -200/=
16) முடிவெட்டி கீற்றர் பிடிக்க -80/=
17) முடிவெட்டி டை அடிக்க -200/=
18)முடியுடன் தாடி ஒதுக்கி மசாச் -100/=
19) முடிவெட்டி முகம் சீராக்கி டை அடிக்க -230/=
20) தாடி ஒதுக்கி மசாச் -70/=
21) முடி வெட்டி தாடி ஒதுக்கி மசாச் -100/=

நிர்வாகம்,
அழகக சங்கம்,
கிளிநொச்சி

(6314)


## அரசாங்க கேள்வி அறிவித்தல்

**நிவாரணம்,புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கத்துக்கான அமைச்சினால்**
**யாழ்.மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும்**
**சிவப்பு நாட்டரிசி**
**வழங்கலுக்கான கேள்வி கோரல்**

01. யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக் கான 2005 யுலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள பதிவு செய்யப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களுக்கென எதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளில் நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப் பட்டுள்ள மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவுச்சங் கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் வழங்கப்பட வேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படுமி டத்து அவை அவ்வப்போது அறிவிக்கப்படும்.

| இல | ப.நோ.கூ.சங்கம் | அரிசியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | 2005 யுலை (MT) | 2005 ஓகஸ்ட் (MT) | 2005செப்ரெம்பர் (MT) |
| 01 | சாவகச்சேரி | 90 | 90 | 90 |
| 02 | கைதடி | 35 | 35 | 35 |
| 03 | கொடிகாமம் | 100 | 100 | 100 |
| 04 | உடுப்பிட்டி | 15 | 15 | 15 |
| 05 | கட்டைவேலி-நெல்லியடி | 15 | 15 | 15 |
| 06 | பருத்தித்துறை | 40 | 40 | 40 |
| 07 | புலோலி | 15 | 15 | 15 |
| 08 | மருதங்கேணி | 15 | 15 | 15 |
| 09 | யாழ்ப்பாணம் | 90 | 90 | 90 |
| 10 | நல்லூர் | 30 | 30 | 30 |
| 11 | அச்சுவேலி | 35 | 35 | 35 |
| 12 | நீர்வேலி | 35 | 35 | 35 |
| 13 | மானிப்பாய் | 25 | 25 | 25 |
| 14 | பண்டத்தரிப்பு | 25 | 25 | 25 |
| 15 | அளவெட்டி-மல்லாகம் | 15 | 15 | 15 |
| 16 | தெல்லிப்பளை | 75 | 75 | 75 |
| 17 | சங்கானை | 60 | 60 | 60 |
| 18 | சுன்னாகம் | 55 | 55 | 55 |
| 19 | புங்குடுதீவு-நயினாதீவு | 25 | 25 | 25 |
| 20 | வேலணை | | 25 | 25 |
| 21 | ஊர்காவற்றுறை | 25 | 25 | 25 |
| 22 | காரைநகர் | 25 | 25 | 25 |
| 23 | தீவகம் | 25 | 15 | 15 |
| 24 | நெடுந்தீவு | 15 15 | 15 | 15 |
| | மொத்தம் | 900 | 900 | 900 |

02. கேள்விப்பத்திரத்தில் கோரப்பட்ட முழுத்தொகையையோ அல்லது பகுதியையோ கொள்வனவு செய்வது என்பது தேவைக்கு ஏற்ப அரச அதிபரினால் தீர்மானிக்கப்படும்.

03. கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ.சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூ.500/=ஐ யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் செலுத்தி கேள்விப்படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2005.07.04 ஆம்திகதி தொடக்கம் 2005.07.17 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். இவ் வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ. சங்கங்களைப் பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

04. மீளளிக்க முடியாத கேள்வி வைப்புகளாக ரூபா 500/= ஐ அந்தந்த மாவட்ட செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடமிருந்து கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

05. கேள்வி கோரப்படவுள்ள அரிசி சிவப்பு நாட்டு அரிசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக் கப் பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

06. பூரணப்படுத்திய இரு கேள்விப்படிவங்களை தலைவர், மாவட்ட கேள்விச்சபை, மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியா கவோ/ தபால் மூலமாகவோ யாழ்.செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட் டுள்ள கேள்விப்பெட்டியில் 18.07.2005 பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

07. கேள்விப் பத்திரத்தின் தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் "சிவப்பு நாட்டரிசி வழங்குவதற்கான கேள்வி" என எழுதப்படல் வேண்டும்.

08. கேள்விகாரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தனது கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கும் அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளைக் குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ. கூ. சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.

09. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக செயற்படுத்தல் முறிக்காக (Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.


10. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணங்கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.

11. கேள்வி விண்ணப்ப இறுதித்திகதியிலிருந்து கேள்விகள் 30 நாட்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

கணேஷ்,
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(சி.12249)

# மாகாணமட்ட கரபந்தாட்ட போட்டி
# அம்பாறை மாவட்ட அணி சம்பியனானது



வடக்கு கிழக்கு அணிகளுக்கு இடையே இடம் பெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் அம்பாறை மாவட்டம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாவட்ட அணிகளுக்கு இடையேயான ஆண்கள், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் யாழ்.மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் றொகான் இராஜசிங்கம் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா மற்றும் தென்மராட்சி அரசியல் துறைப்பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டார்கள். ஆண்களுக்கான இறுதிப்போட்டியில் யாழ்ப்பாண மாவட்ட அணியும், அம்பாறை மாவட்ட அணியும் மோதிக்கொண்டன. இதில் அம்பாறை மாவட்ட அணி 3-2 என்ற செடகளில் வெற்றி கொண்ட .பெண்களுக்கான இறுதிப்போட்டியில் அம்பாறை மாவட்ட அணியும், மன்னார் மாவட்ட அணியும் மோதிக்கொண்டன. இதில் அம்பாறை மாவட்ட அணி மூன்று செட்களில் மன்னார் மாவட்ட அணியை வெற்றி பெற்றுள்ளது. இதில் வவுனியா மாவட்டத்தில் இருந்து வந்த பொலிஸ் அணியினர் உலங்கு வானூர்தியில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்ததும் அம்பாறை மாவட்டத்தில் இருந்து வந்த அணி கண்டி வீதி வழியாக வந்தமையும் குறிப்பிடக் கூடியதாகும். (41)

(படம். நவம்)

# கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு மன்னாரில் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி


மன்னார் மாவட்டத்தில் கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு மாவட்ட விளையாட்டுத்துறையினர் மாட்டு வண்டிச்சவாரிப் போட்டி ஒன்றினை எதிர்வரும் நான்காம் திகதி நடத்தவுள்ளனர்.

மாவட்ட மாட்டுவண்டிச் சவாரிச் சங்கத்தினர் நடாத்தும் போட்டி கறுக்காய்புலம் மாட்டு வண்டி சவாரித்திடலில் இடம் பெறவுள்ளது. இதில் தமிழீழத்தில் உள்ளஅனைத்து சவாரியாளர்களும் கலந்துகொள்ளலாம் எனவும் அவ்வாறு கலந்துகொள்ள விரும்பும் போட்டியாளர்கள் முன்கூட்டியே மாட்டுவண்டிச் சவாரிச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். போட்டியில் வெற்றியீட்டுவோருக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (18)

# கங்கை அமரன் நினைவு கால்பந்துப்போட்டி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது கிறீன்வில்

கடற்புலிகளின் தளபதி லெப்.கேணல் கங்கையமரனின் நான்காம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு 30 கழகங்களுக்கிடையே நடாத்தப்பட்டு வந்தஉதைபந்தாட்ட இறுதிப போட்டி கடந்த புதன்கிழமை மன்னார் பொது விளையாட்டரங்கில் இடம் பெற்றது.

இரவு 9.00 மணியளவில் மின்னொளியில் நடத்தப்பட்ட இப்போட்டியில் சின்னக்கடை கிறீன்வில் விளையாட்டுக்கழகமும், பனங்கட்டிக கொட்டு சென்ஜோசப் விளையாட்டுக்கழகமும் மோதின. இதில் 2-3 என்ற கோல் கணக்கில் சின்னக்கடை கிறீன்வில் விளையாட்டுக்கழகம் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது. இப்போட்டிகளில் பிரதம நடுவராக ஈசனும் பக்க நடுவர்களாக ஞானராஜ், தாஸ் ஆகியோர் கடமையாற்றினர். (18)



கரும்புலிகள் நாளை முன்னிட்டு வடமராட்சிகிழக்கில் நடைபெற்றுவரும் கடல் விளையாட்டுக்களில் படகோட்டப்போட்டியும் நடைபெற்றது. இதனைப் படத்தில் காணலாம். (படங்கள் சசி, தீபன்)

# பிற்போடப்பட்டது

தமிழீழ விளையாட்டுத் துறையினரால் கரும்புலிகள் நாளை முன்னிட்டு சர்வதேச அளவுத்திட்ட அடிப்படையில் தேசிய அளவில் நடாத்தப்படவிருந்த சைக்கிள் ஓட்ட, மரதன் ஓட்டப்போட்டிகள் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. போட்டிக்கான காலம் பின்னர் அறிவிக்கப்படும் என்பதை தமழீழ விளையாட்டுத்துறையினர் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# கலந்துரையாடல்

கரைச்சிப் பிரதேசத்திற்குட்பட்ட அனைத்து விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர்களுக்குமான அவரச கலந்துரையாடல் ஒன்று நாளை மாலை 3.30 மணிக்கு உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருப்பதால் அனைத்து கழகங்களின் தலைவர், செயலாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கேட்டுக்கொள்கின்றார். (சோ)



ஜேர்மனியில் நடைபெற்ற கான்படரேஷன் கால்பந்துப் போட்டியில் ஆர்ஜன்டீனா அணியை 4-1 என்ற கோல்கணககில் வெற்றிபெற்ற பிரேசில் அணி வெற்றிக்கிண்ணத்துடன்.

# நட்வெஸ்ட் கிண்ண கிரிக்கெட்தொடர் அவுஸ்திரேலியாவுக்கு ஆறுவிக்கெட் வெற்றி



பங்களாதேஷுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடந்த போட்டியில் அவுஸ்திரேலிய அணி ஆறு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, பங்களாதேஷ் ஆகிய மூன்று நாடுகள் இடையேயான கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது.

இதன் ஒன்பதாவது மற்றும் கடைசி "லீக்" ஆட்டம் நேற்று முன்தினம் நடந்தது. இதில் அவுஸ்திரேலிய, பங்காளதேஷ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி பங்களாதேஷை முதலில் துடுப்பாட அழைத்தது. அதன்படி முதலில் ஆடிய பங்களாதேஷ் அணி வீரர்கள் சிறப்பாக ஆடி 50 ஓவர்களின் முடிவில் எட்டு விக்கெட் இழப்புக்கு 250 ஓட்டம் சேர்த்தது.

அதிகபட்சமாக நபீஷ் 75 ஓட்டமும் கால்மசூத் 71 ஓட்டமும் (ஆட்டமிழக்காது) ஹபிபுல்பஷார் 30 ஓட்டமும் எடுத்தனர்.

251 ஓட்டம் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் அவுஸ்திரேலிய அணி ஆடியது. ஹய்டன் ஒரு ஓட்டம், கில் கிறிஸ்ட் 45 ஓட்டம், மார்ட்டின் ஒன்பது ஓட்டம் எடுத்து ஆட்டமிழந்தனர்.

மூன்று விக்கெட்டுகள் விழுந்ததைத் தொடர்ந்து அவுஸ்திரேலிய அணியினர் சிறிது தடுமாறினர். எனினும் பின்னர் வந்த ரிக்கிபொண்டிங் 66 ஓட்டங்களையும் கிளார்க் 80 சைமண்ட்ஸ் 42 ஓட்டங்களை பெற்றதால் 48.1 ஓவர்களில் அவுஸ்திரேலிய நான்கு விக்கெட் இழப்புக்கு 254 ஓட்டம் ..து ஆறு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

# மரியஷரபோவா அதிர்ச்சித் தோல்வி இறுதிப் போட்டியில் வீனஸ் வில்லியம்ஸ்



விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் நேற்று முன்தினம் நடந்த அரை இறுதி ஆட்டம் ஒன்றில், வனஸ் வில்லியம்ஸ் சிடம், மரியஷரபோவா அதிர்ச்சித் தோல்வி அடைந்தார். கிராண்ஸ்சிலாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன டென்னிஸ் போட்டி லண்டனில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று முன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு அரை இறுதி ஆட்டம் ஒன்றில் நடப்பு சம்பியனும், ரஷ்யாவைச் சேர்ந்தவருமான மரியஷரபோவா, அமெரிக்காவைச் சேர்ந்த வீனஸ் வில்லியம்சுடன் மோதினார்.

ஆட்டத்தின் தொடக்கம் முதலே வழக்கத்துக்கு மாறாக ஷரபோவா பதட்டத்துடன் ஆடினார். இதனால் அவர் முதல் செட்டை 6-7 என்ற கணக்கில் கோட்டை விட்டார். இரண்டாவது செட்டிலும் வீனசின் கையே ஓங்கியதால் இதில் 6-7,1-6 என்ற கணக்கில் ஷரபோவா அதிர்ச்சித் தோல்வி அடைந்தார். வெற்றி பெற்ற வீனஸ் வில்லியம்ஸ் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார்.





# பிரேசிலின் இளம் வீரர் ராபினோக்கு வளமான எதிர்காலமுண்டு - ரொனால்டோ



பிரேசில் அணியின் அசைக்க முடியாத வீரர்களுள் ஒருவர் ரொனால்டோ. இவர் சொந்த வேலை மற்றும் ஓய்வு காரணமாக கான்படரேஷன் கால்பந்து தொடரில் பங்கேற்கவில்லை. ரொனால்டோ இல்லாமலே பிரேசில் அணி 4-1 என்ற கோல் கணக்கில் ஆர்ஜன்டீனாவை வீழ்த்தி சம்பியன் ஆனது இந்த வெற்றி குறித்து ரொனால்டோ நேற்று முன்தினம் அளித்த பேட்டியில் கூறுகையில்;

பிரேசில் அணியின் பயிற்சியாளர் கார்லோஸ் அல்பர்டோ பரேய்ரா எனக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்படும் என்று உறுதி அளித்துள்ளார். எங்கள் அணி ஆடும் வேகத்தைப் பார்த்த போது அவ்வளவு எளிதாக வாய்ப்பு அமையும் என எதிர்பார்க்கவில்லை கான்படரேஷன்ஸ் போட்டியில் பங்கேற்க இயலாத நிலையை பயிற்சியாளர் நன்றாகப் புரிந்து கொண்டார். அடுத்த பருவகாலத்தில் திறமையாக செயற்படுவதற்காக கடும் பயிற்சியில் ஈடுபடப் போகிறேன். எனக்குப் பதிலாக அணியில் இடம் பெற்ற ராபினோ சிறப்பாகச் செயற்பட்டார். அவருக்கு வளமான எதிர்காலம் உண்டு. இவ்வாறு ரொனால்டோ கூறினார்.



### சிந்தனைக்கு

சுதந்திரம் என்பது பேரம் பேசிப் பெற்றுக்கொள்ளும் ஒரு வியாபாரப் பண்டமல்ல: அது இரத்தம் சிந்தி வெற்றி கொள்ளப்படும் ஒரு புனிதமான உரிமை.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 02-07-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## 14 நாள் காலக்கெடு!

தமது போராளிகளினதும் பொறுப்பாளர்களினதும் பாதுகாப்பான போக்குவரத்திற்கு ஏற்ற வகையிலான முடிவினை அறிவிக்க விடுதலைப்புலிகள் இயக்கம் சிறிலங்கா படைத்தரப்பிற்கு 14 நாட்கள் - இரு வார கால அவகாசத்தை கொடுத்துள்ளது. அத்தோடு இக்கால அவகாசத்தைப்பயன்படுத்தி அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்காதுபோனால் இவ்விடயம் யுத்த நிறுத்த உடன்பாட்டை முடிவிற்குக் கொண்டுவரக்கூடிய அளவில் வளர்ச்சி காண்பதற்கான வாய்ப்புக்கள் கூட உண்டு என்பதையும் விடுதலைப்புலிகள் இயக்கம் மறுக்கவில்லை.

விடுதலைப்புலிகள் இக்காலக்கெடுவை விதித்தமைக்கு- அதாவது இப் போக்குவரத்தை தீவிர பிரச்சினையாக்கியமைக்கு அண்மைய பிரச்சினைகள் மட்டும் தான் காரணம் என்பதல்ல. நீண்டகாலமாகவே இவ்விவகாரம் சர்ச்சைக்குரியதாகவே வளர்ச்சி கண்டு வந்திருந்தது.

ஆயினும் இறுதியாக கடந்த 26ஆம் திகதி வெலிக்கந்தையில் விடுதலைப்புலிகளின் தொடரணிமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது விடுதலைப்புலிகளுக்குப் பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இத் தாக்குதலின் போது விடுதலைப்புலிகள் தரப்பில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. ஆயினும் தாக்குதல் இலக்குப் பெரிதானதே. தாக்குதல் சரியாக நிகழ்ந்திருக்குமானால் பலர் உயிரிழக்கவும் அரசியல் நிலையில் பெரும் மாற்றங்கள் ஏற்படுவதற்குமான சூழ் நிலையும் உருவாகியிருக்கும்.

ஆனால் தாக்குதல் சரிவரமேற்கொள்ளப்படவில்லை என்பதற்காக இத்தாக்குதல் இலக்கு சிறியதென்றோ பெறுமதியற்றதென்றோ எனக் கொள்ளமுடியாது. அத்தோடு தாக்குதலானது அரசாங்கத்திற்குத் தெரியாது மேற்கொள்ளப்பட்ட தொன்றுமல்ல.

ஏற்கனவே வெலிக்கந்தைப்பகுதியில் விடுதலைப்புலிகளின் மட்டுஅம்பாறை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளரும் , முன்னாள்பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேருவும் இத்தகையதொரு தாக்குதலிலேயே கொல்லப்பட்டிருந்தனர். இதை ஒத்ததான/ ஆனால் இதைவிடப் பெரியதானதாக மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டதே தோல்வியில் முடிவுற்ற கடந்தவாரத் தாக்குதலாகும்.

ஏற்கனவே இத்தகையதொருதாக்குதலுக்கு சிறிலங்கா புலனாய்வுத்துறை திட்டமிட்டிருந்ததான தகவல் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு கிட்டியதினாலேயே இதற்கு முன்னதான தமது போராளிகளின் பயணத்தை ஒத்திவைத்திருந்தது. இது குறித்து போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுவிற்கும் புலிகள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் பலவாரங்கள் தாமதத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பயணத்தின்போது இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் இத்தாக்குதலுக்கும், தமக்கும் சம்பந்தம் இல்லை என்பதுபோன்று சிறிலங்கா இராணுவத்தரப்பு தகவல் வெளியிட்டதோடு இத்தாக்குதலில் உயிரிழப்பு ஏற்படவில்லை. ஆகையினால் இது பெரிதுபடுத்த தேவையற்ற ஒன்று என்பது போன்றும் அபிப்பிரயாயம் வெளியிட்டுள்ளது.

ஆனால் இவ்விரண்டு வாதங்களுமே அர்த்தமற்றவையாகும். அதாவது இப்பகுதி சிறிலங்கா இராணுவத்தினரின் தீவிரபாதுகாப்பிற்கு உட்பட்ட பகுதியாகும். அத்தோடு இப்பகுதியில் ஏற்கனவே விடுதலைப்புலிகள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமையும் தெரிந்ததே. ஆனால் இப்பகுதியில் தாக்குதல் நடைபெற்றமையானது இராணுவத்தரப்பின் அனுசரணையின்றி மேற்கொள்ளப்பட சாத்தியமில்லை.

இதேவேளை இத்தாக்குதல் நடவடிக்கை இராணுவ ரீதியில் தோல்வியே ஒழிய இது திட்டமிட்டவாறு நடந்து முடிந்திருக்குமேயானால் விடுதலைப்புலிகளைச் சேர்ந்த பொறுப்பாளர்களும் , போராளிகளும் என 40இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கலாம். இதுபெரும் நெருக்கடி மிகுந்த சம்பவமாகவே மாறியிருக்கும்.

அத்தோடு இத்தாக்குதல் சம்பவமானது தனியானதொரு சம்பவமாகவும் நோக்கப்பட முடியாது. கிழக்குமாகாணத்தில் அண்மைக்காலத்தில் விடுதலைப்புலிகள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல் சம்பவங்களின் தொடராகவே கொள்ளத்தக்கதாகும். அதாவது கிழக்கில் புலிகளுக்கு எதிராகப் பல்வேறுவகையில் மேற்கொள்ளப்படும் சம்பவங்களின் தொடராகும்.

இந்தநிலையில் இச் சம்பவம் குறித்து விடுதலைப்புலிகள் சீற்றம் அடைந்துள்ளமையும், இப்போக்குவரத்து விவகாரத்துக்கு முடிவுகட்ட காலஅவகாசம் விதித்துள்ளமையும் பொருத்தப் பாடான நடவடிக்கையே ஆகும். ஏனெனில் போராளிகளைத் தொடர்ந்து இழப்பதை சகித்துக்கொண்டிருக்க இயலாது என்பது மட்டுமல்ல சிறிலங்கா அரசின் திட்டமிட்ட செயல்களைத் தொடர்ந்து அனுமதிப்பவர்களாக இருந்தால் விடுதலைப் புலிகளுக்கு கையாலாகாதவர்கள் என்ற பெயர் கிட்டிவிடும்.

## சோமாலியாவில் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் மாலுமியை விடுதலை செய்ய முயற்சி

சோமாலியாவில் போராளிகளினால் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் சிறிலங்கா மாலுமி ஒருவரை விடுவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட சோமாலியாவிற்கு ஐக்கிய நாடுகளின் உணவு நிவாரணங்களை ஏற்றிச் சென்ற கப்பல் ஒன்று கடந்த திங்கட்கிழமை போராளிகளினால் கடத்தப்பட்டிருந்தது.

இந்தக் கப்பலில் சிறிலங்கா மாலுமி ஒருவர் கடமையாற்றியதாகவும் அவரை விடுவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் விஸ்வ வர்ணபால தெரிவித்துள்ளார்.

இந்தக் கப்பலில் 850 தொன் உணவு வகைகள் கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதே வேளை இந்தக் கப்பலை கடற்கொள்ளையர்கள் கடத்திச் சென்றதாகவும், கப்பலிலிருந்த மாலுமி உட்பட மற்றும் சிலரை விடுவிப்பதற்கு ஐந்து இலட்சம் அமெரிக்க டொலர்களைக் கப்பமாக கொள்ளையர்கள் கோரியுள்ளதாகவும் ரொயட்டர் செய்தியொன்று தெரிவித்துள்ளது.

சிறிலங்கா மாலுமியும் மற்றைய சிலரும் பாதுகாப்பாக இருப்பதாகவும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேல்மாகாண சபையில் குழப்பம் தொடர்கிறது புதிய முதல்வருக்கு சு.க.வினர் பலர் எதிர்ப்பு

மேல்மாகாண சபையின் புதிய முதலமைச்சராக நந்தன மெண்டிஸ் பொறுப்பேற்றும் அங்கு இன்னமும் குழப்பம் முடிவுக்கு வரவில்லை.

நந்தன மெண்டிசை சனாதிபதியின் சுதந்திரக் கட்சியை உள்ளடக்கிய பொதுஜன ஐக்கிய முன்னணியின் 20 உறுப்பினர்கள் ஆதரிக்க மறுத்து வருகின்றனர். ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து செயற்பட அவர்கள் முன்வந்துள்ளனர்.

பதவி விலகிய ரெஜினோல்ட் கூரேயை மீண்டும் முதல்வராக்க வேண்டும் என்று 20 உறுப்பினர்களும் வலியுறுத்தி வருகின்றனர். இந்நிலையில் ஆளுநர் அலவி மௌலானாவை சந்தித்த முதலமைச்சர் நந்தன மெண்டிஸ் இப்பிரச்சினை குறித்து முறையிட்டுள்ளார்.

மாகாண சபையில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு பெரும்பான்மை இருப்பதாகக் கூறுகிறார்கள். அதை அவர்கள் நிரூபிக்கட்டும் என்று ஆளுநரிடம் நந்தன மெண்டிஸ் கூறியுள்ளார்.

இப்பிரச்சினை குறித்து கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசியக்கட்சியின் மேல்மாகாண சபை பேச்சாளர் சுஜீவ சேனசிங்கக பொதுஜன ஐக்கிய முன்னணியின் 20 உறுப்பினர்கள் எங்களுடன் இணைந்து செயற்பட முன்வந்துள்ளனர். அவர்கள் நந்தன மெண்டிசை ஆதரிக்க மறுக்கின்றனர். ரெஜினோல்ட் கூரேயை மீண்டும் முதலமைச்சராக்க விரும்புகின்றனர். ஆனால் ஐ.தே.க அதை ஏற்கவில்லை.தற்போதைய நிலையில் ஜே.வி.பி ஆதரவளித்தாலும் கூட பொதுஜன ஐக்கிய முன்னணி தனது பெரும்பான்மையை மேல் மாகாண சபையில் இழந்திருக்கிறது .என்றார் அவர்.

## மரணதண்டனை நிறைவேற்றப்பட்டோருக்கு தண்டனையை நிறைவேற்றப் பணிப்பு

(கொழும்பு)

ரீட்டா ஜோன்கொலை வழக்கின் குற்றவாளிகளுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்படக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ரீட்டா ஜோன் கொலை வழக்கில் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்ட மூவருக்கான மரண தண்டனைகளை நிறைவேற்றுமாறு நீதியமைச்சும்சட்டமா அதிபரும் சனாதிபதிக்கு பரிந்துரை செய்துள்ளனர்.

ரீட்டா ஜோன் வழக்கை விசாரித்த மேல் நீதிமன்ற விசேட மூன்று நீதிபதிகள் குழு 1999 ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி இந்த வழக்கின் குற்றவாளிகள் மூவருக்கும் மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

இதனை எதிர்த்து குற்றவாளிகள் மூவரும்உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுவொன்றை தாக்கல் செய்தனர். எனினும் மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதி செய்த உயர்நீதிமன்றம் அவர்களின் மனுவை 2004 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி தள்ளுபடி செய்தது.

இந்தியப் பிரஜையான ரீட்டா ஜோன் தனது கணவருடன் கொழும்பு முகத்துவாரம் காக்கை தீவு கடற்கரையில் பொழுதைக் கழித்து விட்டு மீண்டும் வீடு நோக்கி செல்கையில் கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார். சம்பவம் நிகழ்ந்து இரு தினங்களின் பின்னர் சேற்றுக்குள்ளிருந்து அவரது சடலம் மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் குற்றவாளிகளாக நிரூபிக்கப்பட்ட மூவருக்கும் நீதிமன்றம் வழங்கிய மரண தண்டனையை அடிப்படையாக வைத்து நீதியமைச்சும்சட்டமா அதிபரும் இரு நீண்ட அறிக்கைகளை சனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளன.

இதற்கமைய ரீட்டா ஜோன் கொலைக் குற்றவாளிகளுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்படும் திகதி, நேரம் மற்றும் இடம்பற்றிய அறிவித்தலில் கையெழுத்திடும் பொறுப்பு தற்போது சனாதிபதியிடம் உள்ளது.

இதுவரை மரணதண்டனை விதிக்கப்பட்ட சுமார் 100 கைதிகள் அளவில் சிறைச்சாலைகளில் இருப்பதாக சிறைச்சாலை ஆணையாளர் ரூமி மசூக் தெரிவித்துள் ளார். தூக்குத்தண்டனையை நிறைவேற்றுவதற்கான நடவடிக் கைகள் யாவும் தற்போது பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாகவும்அவர் மேலும் குறிப்பிட்டார்.

## இலங்கையில் அரிசி கொள்வனவிற்கு உலக உணவுத்திட்டம் ஏற்பாடு

இலங்கை விவசாயிகளிடமிருந்து 18 .130 மெட்ரிக் தொன் அரிசியைக் கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையில் உலக உணவுத்திட்டம் கைச்சாத்திட்டுள்ளது.

இது சம்பந்தமான உடன்படிக்கையில் உலக உணவுத்திட்டமும் ,விவசாய மற்றும் கால்நடை வளங்கள் அமைச்சும் கைச்சாத்திட்டுள்ளது.இதற்கென 519 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கு அந்தத் திட்டம் முன்வந்துள்ளது. வெளிநாட்டு அமைப்பொன்று உள்நாட்டு விவசாயிகளிடமிருந்து இவ்வளவு பெரிய தொகைக்கு அரிசியைக் கொள்வனவு செய்வது இதுவே முதல் தடவையென்று விவசாய மற்றும் கால்நடை வளங்கள் அமைச்சின் செயலாளர் திஸ்ஸ வர்ணசூர்யதெரிவித்துள்ளார்.

புத்தளம் குருநாகல், அனுராதபுரம், பொலனறுவை, அம்பாறை, மட்டக்களப்பு, கிளிநொச்சி, முல்லைத்தீவு ,பதுளை மொனராகலை, கண்டி, இரத்தினபுரி, மாத்தளை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இருந்து இந்த அரிசி கொள்வனவு செய்யப்படவுள்ளது.

அதேபோல ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளிடமிருந்து 8080 மெட்ரிக் தொன் அரிசியைக் கொள்வனவு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

உலக உணவுத்திட்டத்தின் சார்பில் அதன் பிரதிநிதி ஜெப் மப்டிரிக்கும் விவசாய அமைச்சின் சார்பில் அதன் செயலாளர் திஸ்ஸ வர்ணசூர்யவும். இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

## தனித்தரப்பிற்காக பதவிகளை தூக்கியெறிவது முட்டாள்தனம் -அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதற்காக பதவிகளைத் தூக்கி எறிந்து விட்டு அரசிலிருந்து வெளியேறக்கோருவது முட்டாள் தனமான கோரிக்கை எனவும் முஸ்லிம் சமூகத்தின்உரிமைகளை வென்றெடுக்க உள்ளிருந்தே போராட வேண்டியது அவசியம் எனவும் கிழக்கு மாகாண அபிவிருத்தி உட்கட்டமைப்பு அமைச்சர் ஏ. எல். எம். அதாவுல்லா தெரிவித்துள்ளார்.

இரண்டு சாதாரணஅதிகாரிகளுக்கிடையிலான இந்த ஒப்பந்தத்தினால் முஸ்லிம்சமூகத்தின் ஒட்டு மொத்த உரிமைகளும் பறிக்கப்பட்டுள்ளதாக கருதிவிடக்கூடாது எனவும் தெரிவித்துள்ளார்.

# கரும்புலிகள் திருவுருவப்படங்கள் தாங்கிய
# ஊர்தி பவனிகள் நேற்று ஆரம்பமாகின

(அலுவலக செய்தியாளர்)

கரும்புலிகள் நாளை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களினால் உருவமைக்கப்பெற்ற கரும்புலிகளின் திருவுருவப்படங்கள் தாங்கிய ஊர்தி பவனி நேற்று கிளிநொச்சியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைமைச் செயலக வளாகத்திலிருந்து கரும்புலிகள் திருவுருவப்படங்கள் தாங்கிய ஊர்தி பவனி ஆரம்பமாகி



கிளிநொச்சியில்

கிளிநொச்சி டிப்போச் சந்தியினை வந்தடைந்து அங்கிருந்து ஏ-9 பிரதான வீதி வழியாக பளை பிரதேசம் நோக்கி ஊர்தி புறப்பட்டுச் சென்றது. வீதி இரு மருங்கிலும் மக்கள் திரண்டு கரும்புலி வீரர்களின் திருவுருவப் படங்களுக்கு மலர் அஞ்சலி செலுத்தினர்.

நேற்று இரவு பளைப் பிரதேசத்தில் தரித்து நிற்கும் மேற்படி கரும்புலிகளின் திருவுருவப்படங்கள் தாங்கிய சிறப்பு ஊர்தியானது இன்று காலை பளையிலிருந்து புறப்பட்டு பரந்தன் சந்தி வந்தடைந்து பின் முல்லை. வீதி வழியாக விசுவமடு சென்று அங்கிருந்து மீண்டும் புளியம்பொக்கணைச் சந்தி வழியாக வட்டக்கச்சி வந்தடைந்து அங்கிருந்து புறப்பட்டு கோவிந்தன் கடைச் சந்தி வழியாக கிளிநொச்சி வந்து தரித்து நிற்கும்.

மூன்றாம் திகதியன்று காலை கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டு கனகபுரம் வீதி வழியாக ஸ்கந்தபுரம், அக்கராயன், வன்னேரிக்குளம் சென்று அங்கிருந்து புறப்பட்டு முழங்காவில் சென்று மன்னார் வீதி வழியாக பூநகரி சென்று தரித்து நிற்கும்.

நான்காம் திகதி காலை பூநகரியிலிருந்து ஊர்தி புறப்பட்டு குஞ்சுப் பரந்தன் வீதியூடாக உருத்திரபுரம் வந்தடைந்து அங்கிருந்து புறப்பட்டு கரடிப்போக்குச் சந்தியூடாக முறிகண்டி சென்றடைந்து அங்கிருந்து மீண்டும் புறப்பட்டு பாரதிபுரம் வீதியூடாக கிளிநொச்சி வந்தடைந்து கிளிநொச்சியில் தரித்து நிற்குமென ஊர்தி பவனி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை முல்லை.மாவட்ட அரசியல்துறையினரின்



புதுக்குடியிருப்பில்

ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பில் நேற்று கரும்புலிகளின் உருவப்படங்களைத் தாங்கிய ஊர்தி பவனி ஆரம்பமானது. இந்த ஊர்தி முல்லை.மாவட்டத்தின் அனைத்துப் பிரதேசங்களுக்கும் செல்லவுள்ளது. (சோ,08)

# மு.கா.வின் மூன்று அதிருப்தியாளரை விலக்கியமை சட்ட விரோதமானது

### -உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசைச் சேர்ந்த மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களையும் பதவியிலிருந்து விலக்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளமை நியாயத்திற்குப் புறம்பானவை என உயர் நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது. இந்த மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் தாக்கல் செய்த மனுவை பரீசிலித்த ஐந்து நீதியரசர்கள் கொண்ட குழுவினர் இந்தத் தீர்ப்பை வெளியிட்டனர்.

உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர், ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர், தேர்தல் ஆணையாளர், பாராளுமன்ற பொதுச் செயலாளர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்த மனுக்களை பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, நீதியரசர்களான நிஹால் ஜயசிங்க, நிசங்க உதலாகம, நிமல் திஸாநாயக்க, ராஜா பெர்னாண்டோ ஆகியோர் பரிசீலனை செய்தனர்.

# சிறீலங்கா இராணுவ புலனாய்வாளர் மூவருக்கும் மரணத்திற்குப்பின் பதவியுயர்வு

கொல்லப்பட்ட சிறிலங்கா இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மூவருக்கும் மரணத்திற்குப் பின்னரான பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

சார்ஜண்ட் ஆர்.எம்.எஸ்.குலரத்ன ஸ்ராவ் சார்ஜண்டாக பதவி உயர்த்தப்பட்டுள்ள அதேவேளை, லான்ஸ் கோப்ரல் சமன் குமார, முழு அந்தஸ்த்தைக் கொண்ட கோப்பரலாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இராணுவ சாரதி சமிந்த குமார லான்ஸ் கோப்ரலாக பதவி உயர்த்தப்பட்டுள்ளதாகவும் இராணுவம் தெரிவித்துள்ளது.

ஸ்ராவ் சார்ஜண்ட் ஆர்.எம்.எஸ். குலரத்னவின் இறுதிக் கிரியைகள் அவரது சொந்த ஊரான தம்புத்தேகமவில் இடம்பெறும் அதேவேளை, கோப்ரல் சமன் குமாரவின் இறுதிக் கிரியைகள் அம்பாறையில் இடம்பெறவிருக்கிறது.

இவர்களின் இறுதிக் கிரியைகள் முழு அளவிலான இராணுவ மரியாதையுடன் இடம் பெறவுள்ளன.

அதேவேளை, புத்தல வைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரலின் இறுதிக் கிரியைகள் தொடர்பான முடிவுகள் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## ஜே.வி.பி....

சபைகளிலும், பாராளுமன்றத்திலும் ஜே.வி.பி அரசாங்கத்திற்கு நெருக்கடி ஏற்படுத்தமுயன்றால் அதனை முறியடிக்கும் வகையில் ஐ.தே.க நடந்து கொள்ளும் எனவும் இதன் மூலம் ஜே.வி.பி எதுவுமே செய்ய முடியாத நிலையை ஏற்படுத்த ஐ.தே.க முடிவுசெய்துள்ளதாகவும் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.(32)

# மீண்டும் முதல்வராக ரெஜினோல்ட் கூரே!

(கொழும்பு)

மேல் மாகாண முதலமைச்சராக ரெஜினோல்ட் கூரேயை மீண்டும் நியமிப்பது என ஆளுநர் அலவி மௌலானா முடிவெடுத்துள்ளார்.


இதன் அடிப்படையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மூன்றாம் திகதி ரெஜினோல்ட் கூரே பதவிப் பிரமாணம் செய்து கொள்வார். சபையின் 61 அங்கத்தவர்கள் இதற்கான பரிந்துரையை செய்துள்ளனர். (முன்னர் வந்த செய்தி 11ஆம் பக்கத்தில்) (32)

## சனாதிபதியின்...

நாடு எதிர் கொண்டுள்ள பாரிய சுமை, யுத்த நிறுத்தம், சமாதானம் பொதுக்கட்டமைப்பு உருவாக்கத்திற்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல் என பல பிரச்சினைகளுக்கு நாடு முகம் கொடுக்க முடியாது திணறும் போது சனாதிபதி முறைமை குறித்து பேசுவது அர்த்தமற்றது எனவும் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்தார்.

# வீதியைக் கடக்க முற்பட்ட உந்துருளி கண்டர் வாகனத்துடன் மோதியது!

### -இருவர் படுகாயமடைந்தனர்



(அலுவலக செய்தியாளர்)

புளியம்பொக்கணைச் சந்தியில் கண்டர் ரக வாகனம் ஒன்றும், உந்துருளி ஒன்றும் நேற்றுக் காலை விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயங்களுக்குள்ளாகினர்.

மேற்படி சம்பவமானது நேற்றுக் காலை 10.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. பரந்தனில் இருந்து முல்லைத்தீவு நோக்கி சென்று கொண்டிருந்த கண்டர் ரக வாகனத்துடன் புளியம்பொக்கணை சந்தியில் வீதியின் மறுபக்கத்தை வீதியின் குறுக்காக உந்துருளியில் சென்றவர் கடக்க முற்பட்டவேளையே மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளது.

உந்துருளியில் பயணித்த புளியம்பொக்கணையைச் சேர்ந்த கோ. உதயபாலன், திருநாமகுட்டி ஆகிய இருவரும் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் தருமபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்பு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். (தீ)

## நாளை மின்சாரம் தடைப்படும்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி மின்சார சபையினரின் மின்பிறப்பாக்கியின் பராமரிப்பு திருத்த வேலைகள் நாளை இடம்பெறவுள்ளதென தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக நாளை காலை 4.30 மணிதொடக்கம் நண்பகல் 12.00 மணிவரை மின்சாரம் தடைப்படுமென மின்சாரசபையினர் வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துள்ளனர். (சோ)

## கிளிநொச்சி...

பிரதிக் கல்விப் பணிப்பாளர் பத்மநாதன் ஆகியோர் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன் ஏற்றி வைத்தார். அடுத்து மண்டபத்தில் கரும்புலிகளின் திருவுருவப் படங்களுக்கான ஈகச் சுடரேற்றி மலர்மாலை அணிவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

தொடர்ந்து ஆரம்பமான பேராளர் சங்கம நிகழ்வில் தலைமையுரையினைத் தொடர்ந்து சிறப்புரையினை அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் வழங்கினார். அதனைத் தொடர்ந்து கருத்துரைகளை யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் திருமதி பத்மினி சிதம்பரநாதன், சிவநேசன், யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர் சொலமன் சூ.சிறில்,தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன் ஆகியோர் நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து போராளிகளின் முன்மொழிவுகள், கருத்துரைகள் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து பேராளர் மாநட்டில் வைத்து கிளி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச்செயலாளரினால் பேரவை பிரகடனம் வாசிக்கப்பட்டது/ 2005 ஆம் ஆண்டு போர் ஆண்டாகப் பிரகடனப்படுத்தப் படுவதோடு தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் போரைஆரம்பிக்க தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களுக்கு வேண்டுகை விடப்படுவதாகவும் தெரிவிக்கப் பெற்றது.

மேற்படி நிகழ்வில் கரைச்சி. கண்டாவளை பூநகரி, பளைப் பிரதேச செயலாளர்கள், கிளி.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் கலைவாணன் மாவட்ட பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை பேராளர்கள் பெருமளவில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## விடுதலைப்புலிகளின்...

எனவும் கூறினார்.

அரசியல் துறைப் பொறுப்பாளர். தமிழ்ச்செல்வனுக்கும் கண்காணிப்புக் குழுவினருக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பின் போது போராளிகள் கிழக்கிற்கு பயணங்களை மேற்கொள்ளும் போது பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்வதற்கு தவறினால் போராளிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை தாங்களே வழங்க நேரிடும் எனத் தெரிவித்திருந்தமை தெரிந்ததே.

நேற்று இந்தச் சந்திப்புக் குறித்து கருத்துத் தெரிவித்த யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஹலன் ஓலவ் சூட்டில் அவர்கள்.

விடுதலைப்புலிகளுடனான சந்திப்பின் போது அவர்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் குறித்து சிறிலங்கா சமாதானச் செயலக பணிப்பாளருக்குத் தெரிவித்ததாகவும் பின்னர் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்து அவருக்கு எடுத்துக் கூறியதாகவும் கூறினார். மேலும் இந்தச் சந்திப்புக் குறித்து கருத்துக்களையும் விபரங்களையும் கூற அவர் மறுத்துவிட்டார்.

வரும் புதன்கிழமை சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்றுப் ஹொக்லண்ட் பேசவுள்ளதாகவும் இதன் போது விடுதலைப்புலிகளின் கருத்துக் குறித்து முதன்மை அளிக்கப்படுமெனவும் அவர் கூறி உள்ளார்.

## இன்று...

திருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி இதற்கமைய மக்கள் ஆணையைப்பெற்றுக்கொள்ளும் சனாதிபதித் தேர்தலை உரிய காலத்தில் நடத்துமாறு வலியுறுத்தும் மக்கள் சக்தியை வெளிப்படுத்தும் பேரணியை இன்று சனிக்கிழமை தெவுந்தரவில் இருந்து ஆரம்பிக்கவுள்ளது.

" மக்கள் சக்தி பேரணி 4 " என்ற பாதயாத்திரை தொடர்பாக விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாட்டின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் கருஜய சூரிய இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

## பொதுக்கட்டமைப்பு...

இந்நிதியத்தை உலக வங்கியானது தன் பொறுப்பில் வைத்திருக்க விரும்புவதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில் பொதுக்கட்டமைப்புக்கான சர்வதேச பார்வையாளர்கள் நியமனம் தொடர்பான பரிந்துரையை ஆசிய அபிவிருத்தி வங்கி அளித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

நிதியம் மற்றும் சர்வதேச பார்வையாளர்கள் குறித்த இறுதி முடிவுகள் எதிர்வரும் கிழமைக்குள் முடிவுசெய்யப்படக் கூடும் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கரும்புலிகள்...

பிரதேச வாரியாக, மண்டபங்கள் அமைத்து கரும்புலிகளின் படங்களை வைத்து மக்கள் வீரவணக்கம் செலுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இதேவேளை கரும்புலிகள் நாளை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள் உட்பட பல்வேறு போட்டிகளும் நடைபெறுகின்றன.

இதேவேளை வீதிகள், வர்த்தக நிலையங்கள், பொது இடங்கள் எங்கும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு கரும்புலிகளின் தியாகங்களை வெளிப்படுத்தும் வகையில் பதாகைகள் கட்டப்பட்டுள்ளது. அத்தோடு வீதிகளின் நினைவு வளைவுகள் கட்டப்பட்டும் உள்ளன.

இதேவேளை உடையார் கட்டுப் பிரதேசத்தில் கரும்புலிகள் நாளன்று காலை 10 மணிக்கு உடையார்கட்டுச் சந்தியில் கரும்புலிகளின் உருவப் படங்களை தாங்கிய பேரணி அங்கிருந்து உடையார்கட்டு மாவீர் மண்டபத்தை சென்றடைந்து அங்கு அஞ்சலி நிகழ்வுகளும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் வைத்தியசாலைகள் மற்றும் பொது இடங்களில் சிரமதானப் பணிகளை தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டின் பேரில் கிராமம் கிராமமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச,தீ,சோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது